1365

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 10—No. 8.

20 SEP 1937
MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் 1937௵ ஆகஸ்டு௴ | இதழ் ௮ |
|---|---|---|

உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| விடை ஊரும் விமலன் ... ... | ௨௮௫ |
| தும்மல் ... ... ... | ௨௯௪ |
| எண்வகை மலர்கள் ... ... | ௨௯௯ |
| அருணகிரிநாதர் ... ... ... | ௩௦௭ |
| தேன்கூடு ... ... ... | ௩௧௬ |
| சுந்தரர் நாடகம் ... ... ... | ௩௧௭ |

பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1937 தனிப் பிரதி அணா 4.

# திருச்செந்தூர் கோயில் ஆட்சி

இதைப்பற்றி தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் வழக்கறிஞர் திரு. எம். எ. பெரும்படையான் பிள்ளையவர்கள் தலைமையில் 25-7-37-ல் கூடிய ஹிந்துக்களின் பொதுக்கூட்டம் கீழ்வரும் தீர்மானங்களை எகமனதாக நிறைவேற்றிற்று.

1. இந்த ஜில்லாவில் மிகப் பழமையானதும் பிரதானமானதுமான தேவஸ்தானங்களில் ஒன்றாய் இந்த ஜில்லா வாசிகளின் ஆளுகையிலேயே தொன்று தொட்டு இருந்துவரும் **திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தைச்** சென்னை இந்துமத போர்டார் சமீபத்தில் தங்கள் நேர் ஆளுகைக்கு எடுக்க முயற்சிப்பதை இச்சபையார் பலமாய்க் கண்டிக்கிறார்கள். 2. தலத்துப் பழக்க வழக்கங்களைத் தழுவி தலதேவஸ்தானங்களைத் தலத்தார் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகளால்தான் செவ்வையாய்ப் பராமரிக்க முடியுமென்றும், அந்நியர் ஆட்சியில் அத்தகைய பராமரிப்பு இருக்கமுடியாதென்றும், தொன்று தொட்டு இந்த ஜில்லா வாசிகளிடமேயிருந்து வருகிற ௸ கோயிலின் ஆளுகையை போர்டார் எடுத்துக்கொள்வதற்கு ௸ யார்கள் சொல்லும் காரணங்களும் பொருத்தமற்றவையென்றும், போதியவை இல்லையென்றும் இச்சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். 3. ௸ காரணங்களில் அநேகம் தேவஸ்தானக் கணக்குவைப்பு முறையைப் பற்றினவையாயிருப்பதில் அவைகளுக்கெல்லாம் இப்பொழுது சூப்பிரண்டெண்டு பேரில் தர்மகர்த்தாவுக்கு effective control இல்லாததே முக்கிய காரணமென்றும், அதைச் சீர்திருத்தி ௸ சூப்பிரண்டெண்டை தர்மகர்த்தா, சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியார் இவர்கள் controlலில் வைத்துவிட்டால் தேவஸ்தான வேலைகள் செவ்வனே நடைபெறுமென்றும் இச்சபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே அவ்விதம் சீர்திருத்தங்கள் செய்வதைவிட்டு ௸ கோவிலை சர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டியின் control லிலிருந்து எடுக்கும்படியான நடவடிக்கைகளில் போர்டார் தலையிடுவதை இச்சபையார் கண்டிக்கிறார்கள். 4. போர்டாரின் ௸ நடபடிக்கை பொதுமக்களுரிமையைப் பெயர்த்துத் தனிப்பட்ட கூட்டத்தாரிடம் கொடுக்கக் கூடியதாயிருப்பதால் அந்த நிலைமையிலும் அது மிகவும் ஆட்சேபகரமானதென்று இச்சபையார் கண்டிக்கிறார்கள். 5. இத்தீர்மானங்களின் நகலும் அதற்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் இந்துமத பரிபாலன சம்பந்தமான எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பும்படி பிரசிடெண்டு அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

[கோயில் மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகாரிகள் சில காலமாக வெறுக்கத்தக்க முறைகளைக் கையாள்வது பலரும் அறிந்ததொன்று. இனியேனும் பொதுஜனக் கருத்திற்கிசைய அவர்கள் ஒழுகக் கற்றுக்கொள்வார்களாக.—**பத்திராசிரியர்.**]

உ

சிவமயம்

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 32-ம் ஆண்டு

# சைவர் மகாநாடு

## பெங்களூர்

பேரன்புடையீர்,

இம்மகாநாடும் இதன் சார்பாக இளைஞர் மகாநாடொன்றும் **ஸ்ரீ கணபதி விலாச சபையின்** பேராதரவில் பெங்களூர் கண்டோன்மெண்டிலிருக்கும் இப்ரஹீம் சாயபு தெருவிலுள்ள **வைசிய ஹாஸ்டல்** சபா மண்டபத்தில் அடியிற் காணும் நிகழ்ச்சி முறையிற் குறித்தவாறு ஈசுவரஷ ஆவணிமீ உகூவ (10-9-1937) வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்களில் முறையே திவான்பகதூர் கீ. **தெய்வசிகாமணி முதலியார்**, (Retired Joint Registrar of Co-operative Societies) அவர்களும் திருவாளர் - கூ. **வச்சிரவேல்முதலியார்**, B. A., L. T., (ஆசிரியர், பச்சையப்பன் கலாசாலை, காஞ்சிபுரம்) அவர்களும் தலைமை வகிக்க நடைபெறும். திருநெல்வேலி உயர்திரு - **சுந்தர ஓதுவார் மூர்த்திகள்** மூன்று நாட்களிலும் தமிழ்மறை ஓதுவார்கள்.

தாங்கள் தங்கள் சபையினர் உறவினர் நண்பர்களோடு வந்து நடத்திவைக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

ஆ. அ. இரத்தினசபாபதி,
வரவேற்புக் காரியதரிசி.

ம. பாலசுப்பிரமணியன்,
பொதுக் காரியதரிசி.

# நிகழ்ச்சி முறை

**ஈசுவர ௵ ஆவணி ௴ ௨௬ ௳ (10-9-37) வெள்ளிக்கிழமை**

காலை 9—11 திருக்கோயில் வழிபாடு, சுந்தரர் நாடக வெளியீடு.
மாலை 3—4 தலைவர் ஊர்வலம், வரவேற்பு.
" 4—4.45 தலைவர் பேருரை.
" 4.45—5.30 திரு. வி. கலியாணசுந்தர முதலியார் "சகோதர நேயம்"
" 5-30—6.15 திரு. புரிசை முருகேச முதலியார் "மாம்பழம் வருவித்த மாதரசி"
" 6-15—7 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

---

**ஈசுவர ௵ ஆவணி ௴ ௨௭ ௳ (11-9-37) சனிக்கிழமை**

காலை 8-30—11-30 இளைஞர் மகாநாடு—தலைமையுரை—திரிசிராப்பள்ளி நீலாவதி யம்மையார், விலாரிப்பட்டு வித்வான் வேணுகோபால முதலியார் சொற்பொழிவுகள்.
மாலை 4-30—5-15 திரு. க. வச்சிரவேல் முதலியார் "மெய்கண்டார்"
" 5-15—6 பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் "திருவாசகக்குயில்"
" 6 —6-45 திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் "திருக்குறள் ஆராய்ச்சி"
" 6-45—7-30 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

---

**ஈசுவர ௵ ஆவணி ௴ ௨௮ ௳ (12-9-37) ஞாயிற்றுக்கிழமை**

காலை 8 —8-45 தணிகை நிர்மலாநந்தர் திரு. வேதாசல சுவாமிகள் "அஞ்செழுத்துண்மை"
" 8-45—9.30 திரு. புரிசை முருகேச முதலியார் "அப்பரை வழிபட்ட அந்தணர்"
" 9-30—10-15 தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.
மாலை 4 —4-45 ராவ்சாயபு B. G. இராஜகோபால முதலியார் (ஆங்கிலத்தில்) "Service"
" 4-45—5-30 திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை (ஆங்கிலத்தில்) "Modern Problems"
" 5-30—6-15 நன்றி கூறல்.
" 6-15—7 தலைவர் முடிபுரை, கடவுள் வாழ்த்து.

Sadhu Press, Madras.

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

| மலர் ௧௦ | ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் 1937ஆ ஆகஸ்டுமீ | இதழ் ௮ |
| --- | --- | --- |

## விடை ஊரும் விமலன்*

அயனுந் திருமாலும் வந்து பிறப்பதற்கு ஆசைப்படுகின்ற இச்சிறந்த உலகத்தில் பலவகைப்பட்ட பிறவிகளுக்குள் மிக உயர்ந்த ஒன்றாயிருக்கின்ற மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையரா யிருக்கின்றோம். அவற்றுளெல்லாம் மிகச் சிறந்தது அறிவு. எது ஒன்று உடைமையால் எல்லாம் உடையராய்க் கருதப்படுகின்றோமோ, எது ஒன்று இன்மையால் மற்ற யாவுமிருந்தும் ஒன்றும் இலராய்க் கருதப்படுகின்றோமோ, அது அறிவாகும்.

"அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்."

*(இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 27-4-37ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கச்சி - முனிசாமி உடையார், B.A., அவர்களால் எழுதப்பெற்றது.)

இவ்வறிவு ஒன்றே மனிதனைச் சிறப்பிப்பது. இஃது ஆராய்ச்சி அறிவு அனுபவ அறிவு என இருவகைப்படும். ஆராய்ச்சி அறிவு இருந்தபின் தான் அனுபவ அறிவு விளங்கும். ஆராய்ச்சி அறிவை நாம் முன்னர்த் தொழிற்படுத்த வேண்டும். அறிவு தொழிற்பட மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவிசெய்கின்றன. இவற்றுள் தூரத்தில் சென்று அறியும் இயல்புடைமையின் கண் மிகச் சிறந்த கருவி. கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை முதலில் ஆராய்ந்து பின் புலப்படாத பொருளை ஆராய்ந்து அதைப்பெற்று அதனல் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று நிச்சயிப்பவரே அறிவு பெற்றாராவர்.

கண்ணைக் கொண்டு ஆராயப்புகின் அதற்குப் புலப்படுவது உலகமும் அதிலுள்ள பலவகைப்பட்ட உடல்களுமாம். ஐம்பூத இயற்கைநிலை உலகம், அவற்றின் மாறிய நிலை உடல். உடல்கள் அவன், அவள், அது எனும் மூவகைப் பகுப்பினவா யிருக்கின்றன. ஒவ்வொரு பகுப்பும் பலவேறு வகைப்பட்டிருக்கின்றன. பலவேறு வகைப்பட்ட அவயவப் பகுப்புடைய இவ்வுலகம் அறிவுடையதா யிருக்கவும் இல்லை. உலகத்தை ஐயந் திரிபற உண்மையாய்க் காண்கின்றோம். ஆகவே கண்ணறிவு கொண்டு உலகத்தை ஆராய நுழைந்த காலத்து அஃது பலவேறு வகையாய், அவன், அவள், அது எனும் அவயவப் பகுப்புடையதாய், கண்ணுக்குப் புலப்படுவதாய், அறியாமை உடையதாய்த் தோன்றுகிறது. ஒரு தன்மைத்தாயிராமல் பலவேறு வகையாய் மூன்று அவயவப் பகுப்புடைமையின் உலகம் இயற்கையன்று, நித்தியமன்று, என்பதும்; அறிவற்ற பொருளானமையின், தானேதொழிற்படும் சக்தியின்றி ஒருவனல் தொழிற்பட வேண்டுதலின் அஃது செயப்படுபொருள் என்பதும்; செயப்படு பொரு

ளாய்க் கண்ணால் காணப்படுவதால் அழியும்பொருள் என்பதும் நன்றாய் விளங்குகின்றன.

செயப்படு பொருளாகிய உலகத்திற்குக் கர்த்தா ஒருவன் இருக்கவேண்டும். அவன் நம்மில் ஒருவனன்று, ஏனெனில் நம்மில் யாருக்கும் இவ்வுலகத்தில் ஒரு சிறு பாகத்தையேனும் உண்டுபண்ணிக் கொள்ள ஆற்றலில்லை; நம் உடலில் ஒரு சிறு அவயவத்தையும் உண்டு பண்ணிக் கொள்ள நமக்கு ஆற்றலில்லை என்றால் இப்பெரிய அதிவிசித்திரமான உலகத்திற்கு நாம் எங்ஙனம் தலைவராகக் கூடும். ஆகவே உலக கர்த்தா உயிர் வர்க்கங்களில் ஒருவனல்லன். அவனைத் தேடப்புகின் அவன் உலகத்தைக் கடந்திருப்பான்—குடத்தைச் செய்த குயவன் குடத்தைக் கடந்திருப்பது போல். அதனால் அவன் கடவுள். அவன் உலகமாகிய ஐந்து பூதங்களில் ஒன்றல்லன், அவை ஒன்று சேர்ந்த உலகமுமல்லன், உலகத்திலுள்ள உயிர் வர்க்கங்களிலும் ஒன்றல்லன். எனினும் அவன் நம்மால் ஆராயத்தக்கவன். உலகத்தைக் கொண்டு ஆராய்ந்தால் கொஞ்சம் தோன்றுவான். இப்படி ஆராய்ந்து அறிந்து அனுபவித்த பெரியார்களின் வாக்கு இதற்குச் சான்றாயிருக்கிறது.

"மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடல்லை
பிறிதல்லை யானாயும் பெரியாய்நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை
உணர்வரிய வொற்றியூருடைய கோவே."—அப்பர்.

"யாவையும் யெவருந் தானாய் அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின்மூர்த்தி

ஆவிசேர் உயிரி னுள்ளால் ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூடலாமே.''
—நம்மாழ்வார்.

"பெரியாய் நீயே'' என்றமையால் அவன் பெருமை யுடையவன் என்பது விளங்கும். பெருமை யுடையதைத் தான் நாம் பேசவேண்டும், சிறுமையுடையதைப் பேசின் அச்சிறுமை நம்மையே வந்தடையும். நாம் அழிவது தோன் றுவதில்லை. இறப்பு பிறப்புகள் நிகழ்கின்றனவே யெனின் இறத்தல் அழிதலல்ல. இறத்தல் எனுஞ் சொல் முடிதல் தாண்டுதல் எனப் பொருள்படும். இறக்கின்றோம் என்றால் நாம் ஒன்றைத் தாண்டுகின்றோம் என்பதாகும். அதாவது தூலஉடலைத் தாண்டுகின்றோம்."தூலஉடல் அரவினதுதோல் என்ன நீங்கவே'' என்றார் சிவஞான முனிவர் அகிலாண் டேஸ்வரியம்மை பதிகத்தில். உலகமோ அழியுந் தன்மை யுடையது. உலகத்தை ஆராயப் புகுந்து, அது அழியுந் தன்மையுடையது, முடிவில் ஒரு பொருளுமில்லை என்று கண் டால் மலைகல்லியும் எலியும் அகப்படவில்லை என்பதுபோல் நம் ஆராய்ச்சி பயனற்றதாகி விடுமல்லவா! இப்படி அயர்வதற்கு இடந்தராது அப்பருடைய உறுதியான வாக்கு. "உள்நல்லை நல்லார்க்கு'' என்று அது உணர்த்துகிறது. நம்மாழ்வாரும் "உணர்வின் மூர்த்தி'' என்றோதுகின்றார். கடவுள் நல்லவர் கள் உள்ளத்தில் இன்பந்தருபவனா யிருக்கின்றான். அவனை ஆராய ஆராய இன்பமுண்டாகும். ஆராயாதிருக்க இருக்க துன்பமே உண்டாகும். ஆராய்ச்சியினால் மட்டுமே அவ்வின் பப் பொருளை அனுபவிக்க முடியும்.

இனி வடமொழி நூல்களில் சென்று ஆராயுமிடத்து ஸ்வேதாஸ்வதாம் 5-வது பாகம் 10-வது ஸ்லோகம் "நீ அவன் அவள் அது வல்ல'' என்று கடவுளைப் பேசுகிறது. தைத்ரீயம் "எந்த இடத்திலிருந்து உன்னால் காணப்படுகின்ற

இந்த பூதங்கள் தோன்றிற்றோ, எதனாலே காக்கப்படுகிறதோ, எதில் இவை இலயம் அடைகிறதோ, அந்தப் பொருளை நீ அறிய முயல்'' என்று கூறுகிறது. வியாசசூத்திரம் (2-வது சூ) "எங்கேயிருந்து உலகங்கள் தோன்றிற்றோ அது'' என்றமையால் உலக காரணன் கடவுள் என்பது விளங்குகிறது. "ஆன்மாவின் அறிவு சுத்தப்படுவது ஈஸ்வரனை அறிவதால்'' என்றார் நீலகண்ட சிவாசாரியார். நாம் அறிவையும் அறியாமையையும் கூடியவராய் இருக்கின்றோம். அறியாமையால் துக்கமுறுகின்றோம். அறிவு சுத்தப்பட கடவுளை ஆராய வேண்டும். 'ஒரு மரம், அதில் ஒரு புருஷன் மோகனாகி ஈஸ்வரனை யில்லாமையால் அடிமையா யிருப்பதால், எப்போதும் துக்கமுடையவனா யிருக்கிறான்; தன்னிடத்திலேயே யிருக்கிற ஈஸ்வரனை நினைத்தால் மோகம் நீங்கினவனாவான்'' என்ற அபிப்ராயத்தை முண்டகம் தெரிவிக்கிறது. ஈசாவாசியமும் இதே அபிப்பிராயப்படுகிறது. நமக்குள்ள இயற்கை யறிவும், பல நூல்கள் கற்றதன் பயனாய் வந்த அறிவும், குருமொழியால் உண்டான அறிவும் ஆகிய இவ்வளவிருந்தும், ஒன்றைத் தப்பென்று தெரிந்தும் அதை விடாமலிருப்பது மோகமாகும். வாசனை விளாம்பழத்தைக் காட்டி விடுவதுபோல் மோகம் ஆணவமல உண்மையைக் காட்டி விடுகிறது.

ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலைசெய்கின்றன. மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம், ஆகிய ஏழும் ஆணவமல காரியம். மோகம் எது என்பது முன்னர்க் கூறப்பட்டது. தன்னைப் புகழ்ந்துகொள்ளுதல் மதமாகும். கிடைக்காத பொருளில் ஆசைகொள்ளுதல் இராகம். கிடைத்த பொருள் பிரிந்ததின் காரணமாகப்படும் துக்கம் கவலை. இறப்பை நோக்கி உற்றார் உறவினரும் பிரியநேரிடும் என்று

நினைந்து வருந்துதல் தாபம். இறந்தாரை நினைத்து உயிரின் அறிவை இழந்து உடலும் இளைத்தல் வாட்டம். உலகத்தில் எல்லாம் வினைவழியாய் நிகழ்கின்றது என்பதை மறந்து, தன்னால் நிகழ்கிறது என்றும், தான் பிறருக்கு நன்மை செய்ததாகவும், தான் பிறருக்குத் தீமை செய்ததாகவும் நினைத்தல் விசித்திரம். இன்ப துன்ப உணர்ச்சி கர்மமல காரியம். நமக்குக் கிடைத்த உடம்பு அதிலுள்ள மனம், நாம் இருக்கும் இடம், அநுபவிக்கும் போகப்பொருள்கள் மாயாமல காரியம். ஆகவே மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. நம்முடைய அறியாமை இப் பதின்மூன்று வகையா யிருக்கின்றது.

இப் பதின்மூன்றும் நம்மால் ஆராயப்படும் பொருளாகிய கடவுளுக்குக் கிடையாது. அப்பொருள் அறியாமை பொருந்திய நம் மனதைச் சுத்தப்படுத்தித் துக்கத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது. "சிவபெருமானாகிய கடவுளே விமலன், நமக்கு மங்களத்தைச் செய்கின்றவன், நாம் மற்றெல்லாவற்றையும் நீக்கிவிட்டு அவனைத் தியானிக்க வேண்டும்" என்கிற அபிப்பிராயத்தை அதர்வசிகை என்னும் உபநிஷத் தெரிவிக்கிறது. எனவே அவன் பதின்மூன்று வகையாக வேலைசெய்யும் மலங்களினின்றும் நீங்கினவன். மலம் அநாதியே இல்லாமையின் சிவன்.

"'நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்."

என்றார் சிவஞான முனிவர். நம்முடைய மலங்கள் கழிய நாம் மலமில்லாதவனை - விமலனை - தியானிக்கவேண்டும்.

எவன் தன் ஆன்மாவில் உள்ள கடவுளைப் பார்த்தானோ அவன்தான் தீரன் என்று கடோபநிஷத் பேசுகிறது. அக் கடவுள் தூல சரீரத்திலும் (தூணிலும்) சூக்கும சரீரத்தி

லும் (துரும்பிலும்) இருப்பான். தூக்கத்தை அடைத்துவைத் திருப்பவன் தூக்கத்தினின்றும் எப்படி நீங்குகிறதில்லையோ அதுபோல் கடவுள் உள்ளேயிருந்தால் மட்டுமே துன்பம் போவதில்லை. தூக்கத்தை வெளியில் கொட்டி ஆற்றிவிட்ட வன் எப்படி அதனால் துன்புறுவதில்லையோ அதுபோல் உள் ளிருக்கும் கடவுள் வெளியில் வந்தால்தான் உயிர்கள் துன் பம் நீங்கி இன்பம் அடையும். "ஆவுறு பிணிகெட ஆவின் பால் கரந்து ஆவினுக்கு ஊட்டல்போல்" உள்ளிருக்கும் கட வுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே போகச்செய் தால்தான் நமக்கு இன்பம் கிடைக்கும்.

"என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாளொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே"

என்றார் நாவுக்கரசர். உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே நிறுத்திவைக்கும் அறிவும் ஆற் றலும் மலத்தால் கட்டுண்டுள்ள உயிர்களாகிய நமக்கு இல்லை. ஆகையால் கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள்படும் துன் பத்திற்கிரங்கி அவரே திருமேனிதாங்கி வெளிவருகின்றார். அவர் கொள்ளும் திருமேனி கர்மத்தாலன்று கருணையினலா கும். "அருளால் மேனி சாத்திய" என்றார் ஒரு பெரியார். "நந்தம் கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு" என்றது சித்தியார். கருணை, தயை, கிருபை, உமை என்பன ஓரேபொரு ளைக் குறிப்பன. "உமையலா துருவமில்லை" என்னும் அப் பர் வாக்கை நோக்கவும்.

கருணையினல் கடவுள் வடிவங்கொள்ளும்போது முற் றறிவுடையவனுதலின் உயிர்களின் பக்குவத் தன்மைக்குத் தக்கவாறு ஒன்பதுவகைத் திருமேனிகள் கொள்ளுகின்றான்.

நாதம், விந்து, சக்தி, சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும், இலிங்கமெனும் அருவுருவத் திருமேனி ஒன்றும், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் எனும் உருவத் திருமேனி நான்கும் ஆக ஒன்பது வடிவங்கள் கொள்கின்றான். பிரமனாய்ப் படைத்தும், விஷ்ணுவாய்க் காத்தும், உருத்திரனாய் ஒடுக்கியும், மகேஸ்வரனாய் மறைத்தும், நாதவிந்து சத்தி சிவமாய் அருளியும் ஐந்தொழிலை இயற்றுகின்றான். நிஷ்கிரியத்திற்கு அருவுருவத் திருமேனி கொள்கிறான். இவ்வொன்பது வடிவங்களாகியும் இவற்றைக் கடந்தும் அவன் இருக்கின்றான்.

கடவுள் கொள்ளும் உருவத் திருமேனிகள், போகவடிவம், கோரவடிவம், யோகவடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அனுபவிக்கப் போகவடிவமும், உயிர்களின் வினைகழிய கோரவடிவமும், உயிர்கள் முத்தி பெற யோகவடிவமும் கொள்ளுகிறார்.

"போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோகமுத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம் உம்பரின் ஒருவன் என்பர்"

அம்மையோடு கூடி யிருக்கும் வடிவம் போகவடிவம். அதிகை முதலிய வீரஸ்தானங்களில் அம்பு வில் முதலிய ஆயுதங்கள் தாங்கிஇருக்கும் வடிவம் கோரவடிவம். தட்சிணாமூர்த்தி வடிவம் யோகவடிவம்.

ஈண்டு பேசப்படுவது போகவடிவம். "இடப்பாக மாதராளோடியைந் துயிர்க்கின்பமென்று மடைபரனும்" என்றமையால், உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடி போகவடிவங் கொண்டான். உலகத்தின் சாரம் தர்மம். "தர்மசாரம் இதம்ஜகத்" என்றார் வால்மீகர். தரு

மத்தைப் போற்றிடின் அன்பு வளரும், அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் வந்தவழி தவம் சித்திக்கும். பின்மனந் தெளியப்பெற்று உயிர் கடவுளைச்சேரும். சேரவே, பிறப்பு நீங்கி பழமையாய்ச் சார்ந்திருக்கப்பட்ட மும்மலங் களும் கழிந்து இன்பமுண்டாகும். எனவே தருமத்தின் உயர்வை யாரே அறையவல்லார்.

> " தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
> அருளெனுங் குழவியு மணையு மாங்கவை
> வருவழி தவமெனு மாட்சி யெய்துமேல்
> தெருளுறு மவ்வுயிர்ச் சிவனைச் சேருமால்.
>
> சேர்ந்துழி பிறவியும் தீருந் தொன்மையாய்ச்
> சார்ந்திடு மூவகைத் தளையும் நீங்கிடும்
> பேர்ந்திட லரியதோர் பேரின்ப மதனை
> ஆர்ந்திடு மதன்பரி சறைய வல்லதோ."

இத்தகைய தருமம் மகா சங்கார காலத்தில் தானும் அழிய நேரிடுமென் றேங்கி யோசித்து விடையுருக் கொண்டு இறைவனை யடைந்து "யானிறவாமையும் தேவரீருக்கு வாகனமாகுந் தன்மையும் மிக்க வலியுடைமையும் பெற்று உயிர்வாழ அடியேனுக் கருள வேண்டும்" என்று வேண்டி நின்றது. அடைந்தோரைக் காக்கின்ற அருட்கடலாகிய இறை வர் தரும தேவதையை ஏற்றுக்கொண்டு எப்போதும் நீங் காது தன்னிடத்து ஊர்தியாய் வைத்துக் கொண்டார். அந் நாள் முதல் இறைவன் அம்மையோடும் முருகப் பெருமா னோடும் தரும தேவதையாகிய விடையை ஊர்ந்து அடியார் களுக்குக் காட்சி கொடுத்தருளா நின்றனன்.

# தும்மல்

[மயிலைக்கிழார் இளமுருகனார்]

தும்மல் பல நாடுகளில் பல வகையாகக் கருதப்படுகிறது. மெயோரி (Maori) மக்களுள் குழந்தைக்குப் பெயர்வைப்பது தும்மலையொட்டியிருக்கிறது. குழந்தையின் மூதாதைகள் பெயரையெல்லாம் புரோகிதர் ஒப்புவித்து வரும்போது, எந்தப் பெயர் வரும்போது குழந்தை தும்முகிறதோ அப்பெயரையே குழந்தைக்கு வைக்கிறார்கள். கென்யாவில் (Kenya) நோய் வந்தவுடன் சுகவீனமா அல்லது இறந்த ஒருவனுவியா அதற்குக் காரணம் என்பதைக் கண்டு பிடிப்பதற்கு மருந்து கொடுத்து மறுநாட்காலையில் நோயாளி தும்மினால் சுகவீன மென்றும் தும்மாவிட்டால் ஆவியின் சேட்டை யென்றும் தீர்மானிக்கிறார்கள். லெப்பர்ஸ் தீவில் (Lepers Island) ஒரு குழந்தை தும்மினால் அதன் ஆவி வெளியே சென்றிருந்து அப்போதே உள் நுழைந்ததாகக் கருதப்படுகிறது. மலாய்நாட்டில் தியாக் மக்களுள் (Dyaks) ஒரு குழந்தை தும்மினால் அதன் ஆவி வெளியே சென்று விடுவதாக எண்ணித் தாய் ஆவியை மீண்டும்வரும்படி அழைப்பது வழக்கம். டோபா படக்ஸ் (Toba Bataks) என்ற மக்களுள் ஒருவன் தும்மலால் ஓயாது சில நிமிஷங்கள் பீடிக்கப் பட்டால், அவன் ஆவி வெளியேறிவிட்டதாக எண்ணி அவன் உறவினர் வைத்தியரைக் கொணர்ந்து மீண்டும் ஆவியைக் கொண்டுவந்து சேர்ப்பதற்காகச் சிகிச்சை செய்வது வழக்கம்.

மேலனேஷியாவில் (Melanesia) ஒருவன் தும்மினால் யாரோ ஒருவர் அவன் பெயரைச் சொல்லுகிறார் என்று கருதப்படுகிறது. சுலு மக்களுள் (Zulus) ஒருவன் தும்மினால்

அவனுடைய மூதாதையின் ஆவி அவனுள் நுழைவதாகக் கருதப்படுகிறது. தும்மினவுடனே அவன் தனக்கு வேண்டிய வரங்களைத் தரும்படி பிரார்த்திக்கிறான். பாலினேஷியாவில் (Polynesia) தும்மல் வெளியே உலாவிய ஆவி மீண்டும் உள்ளே நுழைவதைக் குறிக்கிறது. சைபீரியாவிலுள்ள பரியாத் (Buryat) வகுப்பினருள் தூங்கும்போது ஒருவன் தும்மினால், ஆவி வெளியே போவதாகவும், துஷ்ட ஆவிகள் உடலைக் கைப்பற்றுவதாகவும் எண்ணப்படுகிறது. நார்வே தேசத்துழவர்கள் நோயாளி தும்மினால் சாகமாட்டானென்றும், குழந்தை தும்மினால் நன்றாய் வளருமென்றும், தும்மும்போது ஒருவன் நினைப்பது பலிக்குமென்றும் கருதுகிறார்கள். ஸ்காட்லண்டு தேசத்தில் தும்முகிற ஒருவனை வன தேவதைகள் பிடித்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது.

நாகரிகம் குறைந்த நாடுகளேயன்றி நாகரிகம் மிக்க நாடுகளும் தும்மலைப் பற்பல வகையாகக் கருதிய வரலாறுகளும் உண்டு. கிரேக்கர்கள் தும்மலை நல்ல சகுனமாகக் கருதினார்கள். ரோமாபுரி மக்களும் அவ்வாறே கருதித் தும்மினவனுக்கு வாழ்த்துக் கூறுவது வழக்கம். வேறு பல ஐரோப்பிய மக்களும் தும்முங்கால் கடவுள் காப்பாராக என்று கூறுவது வழக்கம். கிறிஸ்தவர்கள் பல நூற்றாண்டுகட்குமுன் தும்முங்கால் சிலுவையைப்போல் தங்கள் மார்புக்கெதிரே கைஜாடை செய்து கடவுள் காக்க என்று கூறுவது வழக்கம். முகம்மதியர்களுள் ஒருவன் தும்மினவுடன் "கடவுள் புகழப்படுக" என்று தும்மினவனும், "கடவுள் உன்மீது இரக்கம்கொள்க" என்று அருகிலுள்ளவர்களும் கூறவேண்டுமென்பது கடமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. பாரசீக தேசத்திலும், யூதர்கள் சமூகத்திலும் இவைபோன்ற பழக்கங்கள் பலவுள்ளன.

பெரும்பாலும் முன்னறிக்கையின்றி நிகழ்வதாலும், அடக்குதற்கரியதாயிருத்தலாலும், தும்மல் தெய்வசம்பந்த

முடையதாகவும், துன்பம் விளைவிக்கும் ஆவிகளின் தொடர் புடையதாகவும், முன்னிலையிலில்லாதவர்கள் நினைப்பதால் எற்படுவதாகவும் பலவாறுகக் கருதப்படுவது இயற்கையே. இக்கருத்துக்கேற்ற முறையிலேயே பழக்கங்கள் அமைந் துள்ளதும் இயல்பே. பற்பல நாடுகளிற் பற்பல நிலையிலுள்ள மக்கள் கருத்துக்களையும் பழக்கங்களையும் இதுவரை ஒரு வாறு கண்டறிந்தோம். இனி நமது நாட்டில் தும்மல் எவ் வாறு கருதப்பட்டு வந்துள்ளதென்பதை ஒரு சிறிது ஆராய் வோம்.

ஒரு குழந்தை தும்மினுல், தாயாரும் அருகிருக்கும் உறவினரும் "நூறு, நூற்றெட்டுக்காலம் வாழு" என்று கூறி அக்குழந்தையை வாழ்த்தும் பழக்கம் நவீன நாகரிகம் மிகுதியாக நுழையாத பழைய குடும்பங்களில் இன்றும் காணப்படுகிறது. திருவள்ளுவர் காலத்தில் குழந்தைகளே யன்றி வளர்ந்த பருவமுடைய மக்களும் இவ்வாறு வாழ்த்தப் பட்டார்கள் என்பது 1312, 1317 எண்ணுள்ள குறட்பாக்க ளாற் கிடைக்கின்றது. இக்காலத்திலும் ஆஸ்திகபுத்திபுடைய தமிழ் மக்கள் தாம் தும்முகிறபோது சிவா, சங்கரா, ஷண் முகா, முருகா என்று கடவுள் திருப்பெயரைக் கூறுவதைக் காண்கிறோம். பழைய காலத்திலும் இவ்வாறு கூறும் பழக்க மிருந்ததென நினைக்க இடமுண்டு. "தும்மலோடருந்துயர் தோன்றிடினும் அம்மலரடியலால் அரற்றுதென்நா" என வரும் திருஞானசம்பந்தர் திருவாக்கை இதற்காதாரவாகக் கொள்ளலாம். தும்மலைத் தீய சகுனமாகக் கொள்வது மரபு. ஆயினும் நமது தும்மல் துன்பம் விளைக்காதென்று சிலர் சமாதானம் கூறும் பழக்கத்தை இன்றும் காணலாம். நெருங் கிய ஓர் உறவினரோ அன்பரோ நம்மைப்பற்றி நினைக்க நேர்ந்தால் நமக்குத் தும்மல், புரக்கையேறுதல் முதலிய

செயல்களுண்டாகும் என்று கூறுவதும் நமது நாட்டுப் பழக்கம். இதற்கும் மேற்கூறிய 1317-ம் திருக்குறட்பா சான்றுகின்றது.

மக்களுடைய நித்திய வாழ்க்கையிலுள்ள ஓர் இயற்கை நிகழ்ச்சி இவ்வுலகிற் பல்வேறு நாடுகளிற் பல்வேறு மக்களாற் பல்வேறு காலங்களில் எவ்வெவ்வாறு கருதப்பட்டு எத்தகைய பழக்கங்களைத் தோற்றுவித்து எவ்வித ஒற்றுமை வேற்றுமைகளை விளைவித்ததென்பதைச் சிறிது ஊன்றிப் பார்க்கும்போது நமக்குப் பெரு வியப்புண்டாகின்றது. ஒரு தும்மலுக்கு இவ்வளவு சக்தி யிருந்தால் வேறு எண்ணிறந்த பல இயற்கை நிகழ்ச்சிகளின் சக்தி எவ்வளவினதா யிருத்தல்கூடும்? இவை யனைத்தையும் விளைவிக்கும் பேராற்றல் வாய்ந்த கடவுளின் பெருமை எத்தகையது? இம்முறையிற் சிந்தித்துக்கொண்டிருந்தால் ஆத்திக வுணர்ச்சியில் நமது மனம் எவ்வளவு தூரம் ஆழ்ந்து செல்கின்றது?

ஒரு நாட்டின் கொள்கைகளும் பழக்கவொழுக்கங்களும் பல துறைகளிலும் ஒத்தமுறையில் வளர்வதுபோல இவ் வாழ்க்கையின் நறுமணமாகத் திகழும் அகத்துறையிலும் வளரும். இத்துறையின் நுட்பங்களைக் கொண்டே அந்நாட்டின் நாகரிகச் சிறப்பு பெரிதும் துணியப்படும். அகத்துறை யிலக்கணமும் இலக்கியமும் ஐரோப்பிய நாகரிகத்திற் சுவல்பமோ சூனியமோ எனப்படும் நிலையிலிருத்தலால் அந்நாகரிகத்தையுடைய மக்கள் இல்வாழ்க்கையும் நுண்ணிய இன்பம் பரிமளிக்கும் வாழ்க்கையல்லவென்று ஊகிக்கலாம். இதைக் கண்கூடாகவும் காண்கின்றேம். தமிழ்நாட்டின் இல்வாழ்க்கை இத்தகையதன்று. இந்நாட்டு அகத்துறை இலக்கியம் நமது பழக்க ஒழுக்கக் கருவூலமாகத் திகழ்கின்றது. இக் கருவூலத்தில் தும்மலைப் பற்றிய சில மணிகளும் மிளிர்கின்

றன. இவற்றுள் தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறளிற் காமத்துப் பாலில்வரும் சிலவற்றை விவரித்து இச்சிறு கட்டுரையை முடிப்பது பொருத்தமுடைத்து.

தலைவனும் தலைவியும் ஓர் அமளியிற் கூடியிருக்கும் சமயத்தில் புலவிக்குக் காரணம் இல்லாதிருப்பினும் காதல் மிகுதியால் நுண்ணியதோர் காரணமுளதாக உட்கொண்டு அதனைத் தலைவன் மேலேற்றித் தலைவி புலத்தல் புலவிநுணுக்கமாகும். இதைத் திருவள்ளுவர் ஓரதிகாரத்தால் விளக்குகிறார். இவ்வதிகாரத்துள் மூன்றுகுறளில் தும்மல் புலவிநுணுக்கத்தை விளக்கிறது. அவற்றுள் ஒன்று "ஊடலால் உரையாடா திருந்தேன், தாம் தும்மினால் நான் தம்மை நீடு வாழ்கவெனக்கூறி உரையாடி ஊடல் ஒழிப்பேனென நினைந்து தலைவர் தும்மினார்." என்று தலைவி தோழிக்குக் கூறுவதாகத் தெரிவிப்பது. இது

"ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து."

என்ற 1312-ம் குறளாகும். மற்றொன்று "யான் தும்மினேன், தலைவி வழுத்தினாள், உடனே அதை மாற்றி உம்மை நினைந்து வருந்தும் மகளிருள் யாவர் நினைத்தலால் உமக்குத் தும்மல் வந்ததென்று கூறி அழுதாள்" என்று தலைவன் தோழிக்குக் கூறுவதாக வரும் 1317-ம் குறளாகும். அடுத்த குறள் மிகவும் அழகு வாய்ந்தது. தும்மலாற் புலவி மிகுதலை யறிந்த தலைவன் அடுத்துத் தோன்றிய தும்மலை யடக்குகிறான். உடனே தலைவி "உம்மை நினைந்து வருந்தும் மகளிர் அவ்வாறு நினைவதை யானறியக் கூடாதென் றெண்ணி வருகின்ற தும்மலைத் தடுத்தீரோ?" என்கிறாள். தும்மினாலும் கஷ்டம், தும்மலை யடக்கினாலும் கஷ்டம், இதென்ன தர்ம

சங்கடம் என்ற நிலையில் தலைவன் தோழிக்குக் கூறுவதாக வருவது,

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று"

ஆகிய 1318-ம் குறள்.

இம்மூன்று குறட்பாக்களாலும் பண்டைக் காலத்தில் இத் தமிழ் நாட்டிலிருந்த பழக்க ஒழுக்கங்களைத் தழுவி நூல் யாத்த தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தும்மலை எவ்வளவு நுட்பமான முறையில் அகத்துறையிற் பயன்படுத்தியுள்ளார் என்பதைக் கூர்ந்து நோக்குங்கால் நமதின்பம் கரைபுரண்டு பெருகுகின்றது.

இனி, நாம் தும்முங்கால் இறைவன் திருப்பெயர் கூறி, மேற் கூறியவற்றிற் கருத்தைச் செலுத்தி இன்புறுவோமாக.

# எண்வகை மலர்கள்

[நா. சிவபாதசுந்தரம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை]

**ம**லர் என்ற சொல்லைச் சொல்லும்போதே நமது மனம் மலர்கிறது. மலரின் இயற்கை அழகில் ஈடுபட்டு நிற்கும்போது நமது அகமும் முகமும் ஒருங்கே மலர்கின்றன. கண்களுக்கும் கைகளுக்கும் ஒருங்கே களிப்பூட்டும் அழகிய பொருள்களில் மலர் தனிப்பெருஞ் சிறப்புடையதாக விளங்குகின்றது. அழகிற் சிறந்த நறுமலர் தனது வடிவினால் காண்போர் கண்களுக்கும் நல்ல வாசனையினால் நாசிக்கும் மென்மைத் தன்மையால் கைகளுக்கும் ஒருங்கே மகிழ்வூட்டுவதாக விளங்குகின்றது. மனிதர் மாத்திரமோ? இல்லை! தெய்வங்களும் கூட மலர்களின்மேல் விருப்பங்

கொண்டிருக்கின்றன. உயிர்களைப் படைக்கின்ற நான்முகனும் செந்தாமரையில் வீற்றிருக்கின்றான். உயிர்களைக் காக்கும் விஷ்ணுவும் தனது உந்தியின்மேல் சீரிய செந்தாமரையைத் தாங்கிக்கொண்டிருக்கின்றான். சம்ஹார கர்த்தாவாகிய சிவபெருமான் தனது முடியில் கொன்றை மலரையும் வெள்ளெருக்குப் பூக்களையும் சூட்டிக்கொண்டு விளங்குகின்றான். பொருட் செல்வத்திற்குத் தலைவியாகிய திருமகள் செந்தாமரை மேலும், கல்விச் செல்வத்திற்குத் தலைவியாகிய கலைமகள் வெண்டாமரை மேலும் வீற்றிருக்கின்றனர். இவ்வண்ணம் இறைவன் உறையும் அகக்கோயிலுக்கும் அவனது திருவடிகளுக்கும் உவமையாகக் கூறக்கூடிய ஒப்புயர்வற்ற மலர்களின் சிறப்பை எவ்வண்ணம் எழுதமுடியும்.

மணத்தினாலும் அழகினாலும் சிறந்த மலர்கள் பலவகைப் பட்டனவாக இருப்பினும் அவற்றுள் எட்டு வகைப்பட்ட மலர்கள் இறைவனது திருவுள்ளத்திற்குப் பெரிதும் உகந்தனவாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. பெரியாழ்வார் திருமொழியிலே அசோதைப் பிராட்டி கண்ணபிரானை மலர் சூட அழைக்கும் திருமொழியிலே, 1 செண்பகப்பூ, 2. மல்லிகைப்பூ, 3. பாதிரிப்பூ, 4. செங்கழுநீர்ப்பூ, 5. புன்னைப்பூ, 6. குருக்கத்திப்பூ, 7. இருவாட்சிப்பூ, 8. நீலோற்பலப்பூ என்னும் எண்வகை மலர்கள் சிறப்பாகக் குறிக்கப் படுகின்றன. இறைவனது திருவுள்ளத்திற்கு இவ்வெண்வகை மலர்களும் மிக உகந்தனவாகக் கூறப்படுவதுபோல் எட்டு வகைப்பட்ட சீரிய குணங்களும் பெரிதும் இன்பமூட்டுவதால் அவ் வெண் குணங்களையும் "அஷ்ட ஞானபுஷ்பங்கள் என்று மெய்யன்பர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். செண்பக மலர் முதலிய எண்வகை மலர்களும் புறப்பூசையில் இறைவனது திருவுள்ளத்திற்கு எவ்வண்ணம் மகிழ்வூட்டுகிறதோ அதுபோல அகப்பூசையிலே 1. கொல்லாமை, 2. ஐம்பொறியடக்கல்,

3. பொறுமை, 4. அருள், 5. அறிவு, 6. வாய்மை, 7. தவம், 8. அன்பு என்னும் எண்வகைக் குணங்களும் என்றென்றும் இறைவனது உள்ளத்திற்குப் பெருமகிழ் வூட்டும். அவை எக்காலத்திலும் வாடாத சீரிய ஞானமலர்க ளாகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. அத்தகைய சிறப் புடைய எண்வகைப்பட்ட ஞான மலர்களைக் குறித்துச் சிறிது ஆராய்வாம்.

## 1. கொல்லாமை

இறைவனது திருவருளை எய்துவிக்கக் கூடிய சிறந்த நெறிகளில் 'கொல்லாநெறி' சிறந்த தொன்றாகும். இவ் வுண் மையை அறிவுறுத்தவே திருவள்ளுவ நாயனாரும்,

"நல்லா றெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி"

என்று அறிவுறுத்தியருளினார். இன்னும் சைவபத்தியில் கைவரப்பெற்ற தவப்பெருஞ் செல்வராம் தாயுமானவரும்,

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லவர் மற்
றல்லாதார் யாரோ? அறியேன் பராபரமே"

என்று அருளிச் செய்தார்.

ஆனால், இக்காலத்தில் தமிழ் நாட்டிலே வாயில்லா ஏழைப் பிராணிகளைக் கொல்வதில் பாமரர்கள் மட்டுமன்றிச் சாஸ்திரம் பயின்ற பண்டிதர்களும் கலந்து கொண்டிருப்பது மெய்யன்பர்களின் மனதைப் பெரிதும் புண்படுத்துவதாக விளங்குகின்றது. தேவர்களை மகிழ்விக்கும் யாகங்கள் என் னும் பெயரால் பிராமணர்களில் சிலரும், கிராம தேவதை களை மகிழ்விக்கும் பூசைகள் என்னும் பெயரால் பிராமணர் அல்லாதாரில் பலரும் இற்றைய தமிழ்நாட்டில் உயிர்க்கொலை செய்யத் தலைப்பட்டிருக்கின்றனர்.

" அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று "

என்னும் நாயனார் அருள் மொழியை அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதாகக் காணோம். கொல்லாநெறி இறைவனது உளத்தை மகிழ்விக்கும் சீரிய ஞானமலராகும். அம்மலரால் ஆண்டவனைப் போற்றி வழிபடுவது அவனது உள்ளத்திற்கு இன்பமூட்டுமேயன்றி ஏழைப் பிராணிகளைப் பலியிடுதல் சிறிதளவும் உகப்பிக்கக் கூடியனவாகா.

" கொல்லாவிரதம் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே"

என்ற பெரியாரின் ஆர்வத்தை இற்றைய தமிழ் நாட்டிலே வாழும் எல்லாரும் மேற்கொண்டு நமது தெய்வத் திருவருள் எங்கும் ஓங்க உழைக்க முயல வேண்டும்.

## 2. ஐம்பொறியடக்கல்

மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளுக்கும் தாம் அடிமைப்படாமல் அவற்றைத் தமக்கு அடிமையாக வைத்திருத்தல் வேண்டும். ஐம்பொறிகளுக்கு ஆசைப்பட்டு ஆசை என்னும் கடலில் சிக்குண்டு மன அடக்கம் இழந்து பெரும் கவலையுடையவராக இருப்போர் இக்காலத்தில் எண்ணிறந்தோர். ஆனால் ஐம்பொறிகளை அடக்கிச் சீரிய நன்னெறியில் முயல்வது மனிதராகப் பிறந்த நமக்கு உரிய கடமைகள் எல்லாவற்றிலுஞ் சிறந்ததாகும். மெய் வாய் முதலிய ஐம்பொறிகளையும் அவற்றால் விளையும் ஆசைகளையும் நல்லொழுக்க வழியிலே செலுத்தி வாழ்வு நடத்துவோன் பேரின்பமாகிய முத்தியைப் பெறுவான் என்பது திண்ணம் என்று கூறலாம். இக்கருத்தமையச் சமண முனிவர்கள்,

"மெய், வாய், கண், மூக்கு, செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்"

என்று நாலடியாரிற் கூறியிருக்கின்றார்கள்.

இது என்னுடையது; இது என்னால் ஆக்கப்பட்டது என்ற ஆணவத்தை நீக்கிச் சுத்த குணமான பர தெய்வமே! நீ என்னை ஒரு கருவியாகக் கொண்டு எல்லாவற்றையும் செய்கின்றாய். என்னுடைய ஐம்பொறிகளை வருத்தி அமைதியை இழந்து ஆசை மிகுந்து உழலும்படி விடாமல் காத்தருள்வாய் என்று பிரார்த்திக்க வேண்டும் என்று ஐம்பொறிகளையும் செலுத்தினால் பேரின்பம் பெற்று உய்யலாம் என்பது உறுதி.

## 3. பொறுமை

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை"

என்பது நாயனார் அருள்மொழி.

பிறரால் எவ்வளவுதான் கோபம் மூட்டப்பட்டாலும் பொறுமையி னின்றும் சிறிதும் வழுவாது இருக்கக்கூட மன உறுதியை அடையப் பெற்றோரே மெய்யன்பர்கள். அத்தகைய மெய்யன்பர்கள் தங்களது வாழ்க்கையில் நேரும் பல வகைப்பட்ட சோதனைகளையும் பிறரது பழிப்புரைகளையும் அடிக்கடி நேரும் தோல்விகளையும் கண்டு சிறிதளவும் சிந்தை கலங்காமலிருப்போர் இறைவனது இன்னருளுக்கு இலக்காகிப் பேரின்பத்தைப் பெற்று உயர்வர். ஆதலின் 'பொறுமை' எனும் ஞான மலர் மெய்யன்பர்களுக்குப் பெரிதும் துணை செய்யக் கூடியதாகும்.

## 4. அருள்

அருள் வடிவினனாகிய கடவுளது திருவருளைப் பெற முயலுவோர் மற்ற உயிர்களிடத்து அருள் உள்ளவராக இருக்க வேண்டும். மக்களிடத்தும் மற்று உயிர்களிடத்தும் அன்பில்லாதவர்கள் இறைவனது திருவருள் பெறுவது அரிது. பொருள் இல்லாதவர்க்கு அவ்வுலகம் இல்லை. அருளனுபூதிச் செல்வராகிய தாயுமானவரும்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே"

என்று இறைவனிடம் முறையிடும் விதம் கவனிக்கத் தக்கதாகும்.

"அருள்சேர்ந்த நெஞ்சி னார்க்கு இல்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்"

என்பதும்,

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்பத்
தன்னுயிர் அஞ்சும் வினை"

என்பதும் பொய்யில் புலவரது வாய்மையாகும்.

ஆதலின் இறைவனது திருவருளைப் பெறுவோர், அவர் மற்றவர்களிடம் கொள்ளும் அருள் பெரிதும் ஞானமலபாகச் சிறந்து விளங்குகின்றது.

## 5. அறிவு

உள்ளம் சென்றவிடத்து உடம்பையும் செல்ல விடாது மனத்தை அடக்கி அன்பிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்த பெரியோரது நட்பைப் பெறுவதும், செல்வம் வந்தபோதும் இன்பம் எய்தியபோதும் அவற்றால் செருக்குறாமலும் வறுமை வந்தபோதும் துன்பம் வந்தபோதும் அவற்

றால் மனங்கலங்காது என்றும் எந்நிலையிலிருப்பதும் அறிவின் தன்மை என்பது நாயனார் விளக்கம்.

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
மேன்மேலுயர்ந்து நிற்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

என்ற நாலடியார்க்கிணங்க ஒருவன் உயர்ந்த நிலையில் நிலை பெற்றிருக்கச் செய்யவும் அவ்வுயர்வுநிலையைக் கெடுத்துக் கீழாக்கிக் கொள்வதும் முன் இருந்த நிலையைத் தம் முயற்சியினால் உயர்த்திக் கொள்வதும் அறிவின் துணை கொண்டே என்னும் உண்மையை ஒருவன் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மேலும் தெய்வத் திருவருள்பெற்ற மெய்யன்பர்களது சீரிய நூல்களை ஆராய்ந்து அவற்றில் அறிவுறுத்தப்படும் சீரிய உண்மைகளை உணர்ந்து அதன்படி நடப்பதும் நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நோக்கத்துடன் தான் கண்டறிந்தவற்றை மற்றவர்களுக்கு வெளியிட்டு நடப்பதும் சீரிய அன்பர்களின் சிறந்த கடமையாகும். இவ்வாறே அறிவு என்னும் ஞான மலர் திருவருளைப் பெறுவிக்கக் கூடியது.

## 6. வாய்மை

உள்ளும் புறமும் ஒத்தவர்களே உத்தம அன்பர்களாவர். சொல்லும் செயலும் முரண்படாத வாழ்வு நடத்துவோரே திருவருளை அடையும் மெய்யன்பர்கள். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாதிருக்க வேண்டும்.

புறத்தூய்மைக்கு நீராடுவது எவ்வளவு இன்றியமையாததோ அவ்வாறே அகத் தூய்மைக்கு வாய்மை கடைப்பிடிப்பது இன்றியமையாததாகும்.

இறைவன் சத்தி வடிவினனாய் விளங்குகின்றான். ஆத வின் பொய்மை உரைப்போர் எவரும் கடவுளின் திருவருள் பெறல் அரிது.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

என்னும் அருள் மொழி கடவுளை அடையும் சிறந்த ஞான தீபமாகும்; இதனால் சீரிய ஞான மலராய் விளங்குவது நன்கு புலப்படும்.

## 7. தவம்

காவியணிந்து காட்டிவிருந்து காய் கனி தின்று காலங் கழிப்பதே தவம் என்பது பலர் நினைவு; உலகத்தில் நடை பெறும் துன்பத்தால் மனங்கலங்காமல் உறுதிப்படுவதற்கும் மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் பாதுகாப்பதே தவம் எனப்படும். நெருப்புச் சுடச்சுட மாசற்ற ஒளி சிறந்து விளங்கும். பொன்னைப்போல் குற்றமற்ற தூயதவம் செய் வோரைத் துன்பங்கள் வருத்த வருத்த அவர்களது பக்தி பெரிதும் உறுதிப்பெறும்.

## 8. அன்பு

"அன்பின்வழிய துயிர்நிலை அஃது இல்லார்க்கு
என்புதோல் போர்த்த வுடம்பு"

என்றார் நாயனார்.

அன்புடையார் அனைத்தும் உடையார்: அன்பில்லார் எவ்வளவு உடையவராக இருப்பினும் ஒன்றும் இல்லாதவரா கவே காணப்படுவர். ஆதலின் கடவுள் அருளைப் பெறு வோர் இறைவனிடமும் அவர் மெய்யடியார்களிடமும் அவர் கள் அருளிய அருள் நூல்களிடமும் அன்புடையவராக இருக்க வேண்டும்.

சகோதர சகோதரிகாள்! இது காறும்கூறிய எண்வகை ஞான மலர்களைக் கொண்டு உண்மையான பக்தியுடன் இன்னருள் உடையவனாகிய இறைவனை வழிபட்டு ஆண்டவனது திருவருளுக்கு இலக்காகிப் பேரானந்தத்தைப் பெறுவீர்களாக.

"நாடீர் நாள்தோறும் வாடா மலர்கொண்டு
பாடீர் அவன்நாமம் வீடே பெறலாமே"

என்றார் நம்மாழ்வார்.

—'இந்து சாதனம்'

# அருணகிரிநாதர்

[திரு. மு. இராகவையங்கார்]

தமிழ் நாட்டில் முருகக் கடவுள் கோயில் கொண்ட தலங்களையெல்லாம் தம் திருப்புகழ்க் கவிமணிகளால் இழைத்து அலங்கரித்த அருணகிரிநாதரின் பெருமைகளை அறியாதார் யாவர்? இவரது வரலாறுகளையெல்லாம் திருப்புகழ்ப் பதிப்பு முதலியவற்றில் தமிழறிஞர்கள் ஆராய்ந்து எழுதியிருக்கின்றனர். ஆயினும் என் ஆராய்ச்சியில் தெரியவந்த செய்திகள் சிலவும் இப்பெரியார் வரலாறறிதற்கு உதவியாம் என்று கருதி அவற்றை இங்கு எழுதலானேன்.

அருணகிரிநாதர், பாரதவிருத்தம் பாடிய வில்லிபுத்தூரார் காலத்தவர் என்பது பெரு வழக்காகவுள்ளது. அவ்வில்லிபுத்தூராரைக்கொண்டு பாரதம் பாடுவித்த வக்கபாகை ஆட்கொண்டான் என்ற தலைவனை இரட்டையர் என்ற புலவர்களும் பாடியுள்ளார். அவ்விரட்டையர் கி. பி. 1331

முதல் 1383 வரை தொண்டை நாடாண்ட மல்லிநாதன்[1] என்ற இராஜநாராயண சம்புவராயனைத் தம் ஏகாம்பரநாதருலாவிற் சிறப்பித்திருத்தலின்[2] அப்புலவர்கள் 14-ஆம் நூற்ருண்டின் இடையில் வாழ்ந்திருந்தவர்கள் என்பது பெறப்படுகின்றது. எனவே, இரட்டையர் காலத்தவரான வில்லிபுத்தூராரும் அவர்காலத்து அருணகிரியாரும் அந்நூற்ருண்டிலும் அதனை யொட்டியும் விளங்கியவர்களென்பது தெளிவாகும்.

அருணகிரியார் தம்காலத்து ஆட்சி புரிந்த அரசரொருவரைப் பிரவுட தேவ மகாராயர் என்ற பெயராற் குறிப்பிட்டிருத்தலைப் பலரும் அறிவர். இவ்வரசரைப்போலவே, தங்காலத்து விளங்கிய மடாதிபதி ஒருவரையும் சோமநாதன் என்ற பெயரால் அவர் சிறப்பிக்கின்ருர். அவை வருமாறு:—

"உதயதாம மார்பான ப்ரவுடதேவ மாராயர்
உளமுமாட வாழ்தேவர் பெருமாளே"—(88)

"அரிவையொரு பாகமான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவி ராது பேணும் அறிவாளன்
அமணர்குல கால ஞகு மரியதவ ராசராசன்
அவனிபுகழ் சோமநாதன் மடமே......முருக"—(828)

இவற்றுள், பிரவுடதேவர் என்ற பெயர் விஜய நகர வேந்தர் சிலர்க்கு வழங்குவதாயினும், 15-ஆம் நூற்ருண்டின் முற்பகுதியில் அப்பெயர்பெற்று ஆட்சி புரிந்தவரான இரண்டாந் தேவராயரே, மேற்கூறியபடி திருப்புகழாற் சிறப்பிக்கப் பெற்றவர் என்று கொள்வது பொருத்தமாகின்றது.

---

[1] I. M. P. Cg. 706; N. A. 623; Cg. 1169.

[2] "வடித்தசுடர் வேற்சம்பன் வாழ்மல்லிநாதன்" "செம்பதுமை கேள்வன் திருமல்லி நாதனுயர் சம்புபதி" என்பன, அவ்வுலாவில் வரும் அடிகள்.

இரட்டையர் வில்லிபுத்தூரர்களின் காலத்தவராகத் தெளியப்பட்ட அருணகிரியாரரற் புகழ்தற்குரிய அரசர் அவரே யாவர் என்பது காலவொற்றுமையால் அறியப்படும். இக்காலத்தே, பழைய சோழவேந்தர்கீழ் மந்திரிகளாகவும் படைத் தலைவராகவும் வாழ்ந்த சம்புவராயர் என்ற பல்லவ குலத்தார், அச்சோழராட்சிக்கு விரோதிகளாய்க் கிளம்பி அவ்வாட்சியைத் தொலைத்துத் தொண்டைநாடு சோணடு முதலியவற்றுக்குத் தாமே தலைவராகி ஆண்டு வந்ததும், விஜயநகர் ஏகாதிபத்தியம் தோன்றியதும், அவர் தலைமையொழிந்து சிற்றரசர்களாய் அன்னோர் ஒடுங்கியதும் சரித்திர மூலம் அறியப்பட்டவை. இக்காலம் 14—15 நூற்றுண்டுகட்கு இடைப்பட்டதாகும். இத்தகைய கால நிலையையே அருணகிரிநாதர் தம் கருவூர்த் திருப்புகழொன்றில்,

“சஞ்சல சரித பரநாட்டியர் மந்திரி குமரர் படையாட்சிகள்
சங்கட மகிபர் தொழவாக்கினை முடிசூடித்
தண்டிகை களிறு பரிமேற்றனி வெண்குடை நிழலி லுலவாக்கன
சம்ப்ரம விபவ சவுபாக்கிய முடையோராய்க்
குஞ்சமும்விசிற விருமாப்பொடு பஞ்சணைமிசையி லிசையாத்திரள்
கொம்புகள் குழல்கள் வெகுவாத்திய மியல் கீதம்
கொங்கணிமகளிர் பெருநாட்டிய நன்றெனமனது மகிழ்பார்த்திபர்
கொண்டய னெழுதும் யமகோட்டியை யுணராரே” (732)

என மிக வழகாக எடுத்துரைத்தல் நோக்கத் தக்கது.[1] இனி இப்பெரியார் புகழும் மடாதிபதியான சோமநாதரை நோக்குவோம்.

[1] இக்காலத்தை யொட்டி விளங்கியவரும், வைணவப் பேராசிரியருமான ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை—“அராஜகமான தேசத்திலே வன்னியடையத் தங்களிலே கைது செய்து கீழ்மேலையிட்டு நாலு வாசலையும் பற்றுமாறு போலே” என்று குறித்திருப்பது இக்கால நிகழ்ச்சியேயாதல் காண்க. (பெரிய திருமொழி 9, 4, 1 வ்யாக்)

அருணகிரியார் அவதரித்ததும், அருள் பெற்றதும், திருப்புகழை மிகுதியும் ஓதியதுமான இடம் திருவண்ணுமலைப் பிரதேசமேயாகும். இதனை,

"உரைபெற வகுத்தருணை நகரிலொரு
பத்தனிடும் ஒளிவளர் திருப்புகழ்" —திருவகுப்பு 12

"அருணையிற் சித்தித்தெனக்குத்
திருவருள் பெருமாளே" —திருப்பு 500

"முன் னருணை நாடதி லோது
திருப்புகழ்" —(890)

என்பன முதலியவற்றுல் அறிக.

"அமணர் குல காலனுகும் அரியதவ ராஜ ராஜன்" என்று இவராற் புகழப்படும் சோமநாதரும் அப்பக்கத்தவரே என்பது "அருணகிரிநாதர் பூசை அடைவு தவிராது பேணும் அறிவாளன்" என இவர் கூறுதலினின்று தெரியலாம். இதற்கேற்ப, திருவண்ணுமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த புத்தூரில்[1] உள்ள சிவாலயத் திருமதிலிற் காணும் சாஸனமொன்று, சக ௵ 1292 (கி. பி. 1370) ல் அரசரான வீர பொக்கண உடையாரால் சோமநாத ஜீயர் என்ற பெரியாரொருவர்க்கு ஷை புத்தூர்க் கோயிலும் மடமும் உரிமையாக உதவப்பட்டன என்று குறிப்பிடுதல்[2] அறியத்தக்கது. சிவாசாரியர்களாகவும் பிரபல வித்வான்களாகவும் விளங்கிய கௌடப் பிராமணர்களின் வாழ்விடமும், முதற் பிரவுட

[1]இஃது இப்போது வட ஆர்க்காடு ஜில்லா ஆரணித் தாலுகாவைச் சார்ந்துள்ளது.

[2]"இந்தத் திருக்கோயில் மாடாபத்தியக் காணியாட்சியுடைய அம்மையப்பரான சோமநாத ஜீயர்க்கு" என்பது சாஸனப் பகுதி (M. E R. No. 56 of 1900); இதனுல் அம்மையப்பரென்பதும் இச்சீயர் பெயரென்பது தெரியலாம்.

தேவராயரால் பிரவுட தேவராயபுரம் எனத் தம் பெயரிட்டு அவ் வந்தணர்க்குத் தானம் செய்யப்பட்டதுமான முல்லண்டிரம்[1] என்ற ஊர், இச்சாஸனமுள்ள புத்தூர்க்கு மிக அடுத்துள்ளதாம். இதனால் அவ்வூரில் வாழ்ந்த பிரபலரான சிவாசாரியர்களிலே[2] சாசனம் கூறும் சோமநாதஜீயரும் ஒருவர் என்று, அவ்வாசாரியர்களிடம் பரம்பரைப் பிரதிபக்தியுள்ள விஜயநகர வேந்தரால் மேற்படி புத்தூர்க் கோயிலும் மடமும், அவருட் சிறந்து விளங்கிய சோமநாதரது மேற்பார்வையில் விடப்பட்டன வென்றும் கொள்வது பொருத்தமாகும். இந்தச் சோமநாதஜீயரே அருணகிரியாராற் சிறப்பிக்கப்பட்ட மடாதிபதி என்பது, அவ்விருவர்க்கும் அமைந்துள்ள இடமும் காலமும் பெரிதும் இயைந்திருத்தலால் தெரியலாம். வீரபொக்கண காடி இச்சாஸன மளிக்கப்பட்ட மூன்ருண்டுகளுக்குப் பின்னர் இரட்டையராற் புகழப்பட்டவகை மேற்கூறிய மல்லிநாத சம்புவராயன் வாழ்ந்திருந்தவன் என்பது மற்ருெரு கல்லெழுத்தால்[3] அறியப்படுகின்றது. இதனுல் அவ்விரட்டையர் காலமும் அருணகிரியார்க்கு முற்கூறியபடி இணங்குதல் காண்க. இனி, சோமநாத ஜீயர் என்ற வழக்கினை நோக்கத்தகும். ஜீயர் என்பது வைஷ்ணவ சந்நியாசிகட்குச் சிறப்புப் பெயராக இன்றும் வழங்குதலை யாவரும் அறிவர். ஆனல் முற்காலத்தே இப்பெயர் சிவாசாரியரான பிராமணர்க்கும் பயின்று வந்ததென்பது " கோளகி மடத்து ஜீயர் ஸந்தானம் (M. E. R. No. 364. of 1916)

---

[1] I, M. P. NA. No. 208.

[2] சோழர் பாண்டியர் முதலியோர்க்கும் ஆசாரியஸ்தானம் வகித்து விளங்கிய கோளகிமடம் பிக்ஷா விருத்தி மடங்களின் சந்தான குரவர்களிற் பலர், இம்முல்லண்டரத்தில் வாழ்ந்த சிவாசாரியர்களே யாவர். M. E. R, 1612 PP. 121—22.)

[3] I. M. P. NA. No. 11

புஷ்பகிரி ஜீயர், ஈசான ஜீயர் (S. I. I. VI. P. 193), ஜீயர் விசுவேசுவர சிவாசாரியார்" (புதுக்கோட்டைச் சாஸனம். பக். 111) என்ற சாஸனத் தொடர்களால் தெளிவாம்.

"திருந்திய குணத்தினு னிறைஞ்சிச் சீய என்று"

என மேருமந்தர புராணத்து வருந்தொடருள் (638) பெரியோன் என்ற பொருளில் இச்சொல் வழங்குதல் இங்கு அறியத்தகும். சிவாசாரியரான சோமநாதர்க்கும் இப்பொருளில் ஜீயரென்ற பெயர் வழங்கிய தென்க. இனி 'சோமநாதன் மடம்' என்று அருணகிரிநாதர் கூறியது, மேற்கண்ட சாஸனத்தின்படி, கி. பி, 1370-ல் மேற்படி ஜீயர்க்கு உரிமையான புத்தூர் மடமாகவே தோற்றுகின்றது. இவற்றால், அப்புத்தூர்ச்சாசனங் கூறுங்காலத்துக்கும் இரண்டாம் பிரவுடதேவராயர் காலத்துக்கும் இடைப்பட்டதே—அஃதாவது 14-ம் நூற்றாண்டிறுதியும், 15 ம் நூற்றாண்டுத் தொடக்கமுமான காலமே—திருப்புகழாசிரியர்க்கும் உரிய தென்பது மிகத் தெளிவாதல் கண்டு கொள்க. இவை நிற்க.

மேற்கூறிய முல்லண்டிரத்தில் வாழ்ந்த பிரபல வித்வான்களிலே டிண்டிமகவி[1] என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஆசுகவிகள் சிலர் அக்காலத்து விளங்கினர் என்பது ஸாஸனங்களால் அறியப்படுகின்றது.[2] அவருள் நம் அருணகிரிநாதரும் ஒருவர் என்பது சரித்திர அறிஞர் சிலரின்[3] கருத்தாகும். 15 ம் நூற்றாண்டில் சாளுவாப்யுதயம் என்ற

---

[1]டிண்டிமம் என்ற வாத்தியத்தை முழக்கிக் கொண்டு ஆசுகவி பாடவல்லோர் என்பது பொருள். "அக்ரே டிண்டிம தாடநம் ததயிதோ வாதித்ய நிர்க்கோஷணம்" என்று தொடங்கும் சுலோகமொன்றும் இன்னோரைப் பற்றிக் கூறப்படுவதுண்டு.

[2]M. E. R. Nos. 83-4 of 1912

[3]ஸ்ரீமாந். தி. அ. கோபிநாதராயர் முதலியோர்.

வடமொழிக் காவியம் இயற்றிய ராஜநாதகவி என்பார் அந் நூலில் தம் தந்தையான அருணகிரிநாதரை 'ஸார்வபௌம டிண்டிமகவி' என்றும் 'அஷ்ட பாஷா பரமேசுவரர்' என்றும், சித்திரகவிப் பிரபந்தம் இயற்றுவதிற் சிறந்தவர் என்றும், சேர சோழ பாண்டியர்களால் பிரதமாராத்யராகப் போற்றப் படுபவர் என்றும் சிறப்பித்துக் கூறுகின்றார். இவ்வாறு புகழப்படும் அருணகிரிநாதர் நம் திருப்புகழாசிரியரே ஆதல் வேண்டுமென்று காலம் இடம் முதலியவற்றின் ஒற்றுமை பற்றி அன்னோர் கருதுவர். இக்கருத்துக் கேற்ப:—

“ஆசுசேர் பெருங்கவி சண்டவாயு
அதிமதுர ராஜனெனென் வெண்குடை
விருதுகொடி தாளமேள தண்டிகை
வரிசையொ டுலாவுமா வகந்தை தவிர்ந்திடாதோ” (181)

“குறித்தநற் றிருப்புகழ் ப்ரபுத்துவக் குருத்துவத்
தெனைப்பணித் தருள்வோனே” (958)

என்பன முதலியவற்றால், சார்வ பௌம டிண்டிமகவி இவரென்பதும்[1]

“அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில் அறிவித்த வேதியனும்”
(புயவகுப்பு, 12)

“சித்ர கவித்துவ சத்தமிகுத்த திருப்புகழ்” (334)

என்பவற்றால், கலைகள் பலவற்றிலும் வல்லவரென்பதும்,

“ஆபாதனேன்மிகப் ப்ரசித்தி பெற்றினிதுலகேழும் [சைப்
யானுக நாம அற்புதத் திருப்புகழ் தேனூற வோதி யெத்தி
புறத்தினும் ஏடேவுராஜதத்தினைப் பணித்ததும்” (1132)

---

[1]வில்லிபுத்தூராரும் “மண்மிசை உயர்புகழ் நிறுத்தித் தீரகாளம்” பெற்றவரென்றும், “வில்லிபுத்தூரிறைவனுஞ் சார்வபௌமன்” என்றும் கூறப்படுதல் இங்கு ஒப்பிடத் தகும். (பாரதம் பாயி.)

"பச்சிம தெட்சிண உத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதும்"......திருப்புகழை" (384)

என்பவற்றினல், மூவேந்தர் நாட்டினும் முதன்மை வாய்ந்த கவியாக மதிக்கப்பட்டவர் என்பதும் விளங்குவதால், மேலே கூறிய அறிஞரின் முடிவு பெரிதும் ஆராய்ச்சிக்கு உரித்தாகின்றது. வடநூற்கடலில் முழுகி ஆனந்தித்தவர் திருப்புகழாசிரியர் என்பதனை, எண்ணிறந்த இடங்களில் வழங்கும் அவரது அரிய பெரிய வடமொழிப் பதங்களாலும் தொடர்களாலும் வழக்குகளாலும் அறியலாம்.

இனி, திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழாசிரியரும் முருகக் கடவுளின் பக்தியிற் சிறந்த முன்னோருள் ஒருவருமாகிய பகழிக்கூத்தர் என்ற புலவர்,[1] தங்காலத்தே அக்கடவுளருளாற் பெற்ற திண்டிமவாத்தியத்தைத் தம் பெருங்கவிப் புலமைக்குறியாக முழக்கிக் கொண்டு சீரிய கவிஞர் சிலர் திருச்செந்தூர்க் கடவுள் திருமுன்பு மங்கலக்கவி பாடி வந்ததை—

"பண்டரு பெருங்கவிப் புலமைக்கு நீசொன்ன
படி திண்டிம முழக்க" (சப்பாணி 2)

"பாவாணர் மங்கலக் கவிவாழிபாடிப் பரிந்து திண்டிம முழக்க"
(சிறுபறை 4)

என்ற அடிகளாற் குறிப்பிட்டிருத்தலைக் காணலாம். இவற்றால் திண்டிம வாத்தியம், ஆசுகவி பாடவல்ல புலவர்களால் தம் புலமைக் குறியாகக் கொள்ளப்பட்டதொன்று என்பதும் அதனை அக்கவி பாடாநின்றே ஒலிப்பிப்பது அவர் தம் வழக்கமென்பதும் அறியப்படும். 'பண் தரு பெருங்கவி' என்றதனல் ஓசையின்பமும் நீட்சியுமுடைய சந்தக்கவிகளாக அவற்றைக் கொள்ளல் பொருந்தும். அத்தகைய திண்டிமகவியாகப் பக

[1] "பகழிக் கூத்தர்" என்ற தலைப்பின்கீழ் யானெழுதிய இப் புலவர் வரலாறு காண்க. (செந்தமிழ்த் தொகுதி 6 பகுதி 6)

ழிக்கூத்தராற் சிறப்பிக்கப் பெற்றோர், நம் அருணகிரி நாதரே போலும்.

இனி, மேற்படி முல்லண்டிரத்தில் உள்ள சிவாலயத் தின் தெற்குத் திருமதிலில் அமைந்த சாஸன மொன்றனுள் சக வருஷம் 1472 (கி. பி. 1550), பார்ப்பனமாதொருத்தி தன் புண்ணியமாகவும் தன்கணவர் குமார திண்டிமர் என் பார் புண்ணியமாகவும் அச் சிவாலயத்துள் அண்ணாமலை நாதர்க்குச் சந்நிதியொன்று கட்டி அதற்குப் பூமியுந் தானஞ் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது.[1] இம்மாது திண்டிமகவி யான அண்ணாமலைநாதரின் வழியினள் என்று கூறப்படுகின் றாள். இவ்வாறு பெரிய கோயிலுள் அமைந்த இச்சிறு சந் நிதி, தன் முன்னோரான அவ்வண்ணாமலை நாதரை வழிபட அப் பெண்ணால் நிருமிக்கப் பட்டதென்றும், அங்ஙனம் வழி படப் பட்டவர் திருப்புகழாசிரியரே ஆகவேண்டும் என்றும், அப் பெரியார் வாகவியாய்த் தெய்வத்தன்மை அடைந்தவ ராதலின், ஏனையிடங்களிற் கோயிலெடுத்துப் பின்னோர் வணங் கியவாறே, அவரூரான முல்லண்டிரம் பெரிய கோயிலுள் அவர் வமிசத்தவளொருத்தி அவருக்குச் சந்நிதி கட்டித் தரு மஞ் செய்தாள் என்றும் கருதப் படுகின்றன.[2] இவை ஒப்புக் கொள்ளப்படின், அருணகிரி நாதர்க்கு அண்ணாமலை நாதர் என்ற பெயர் வழக்கும் உண்டென்றும், அவரூர் முல்லண்டி ரமே என்றும் கொள்ள இடமுண்டு. இவற்றின் உண்மையும் அறிஞர் ஆராய்ச்சிக் குரியது.

—கலைமகள்

---

[1] I. M. P. NA. No. 209.

[2] இங்ஙனங் கருதியோர், ஸ்ரீ. C. V. நாராயணையர் அவர் கள் M. A. "திண்டிமகவிகளும் திருப்புகழ் அருணகிரி நாதரும்" என்ற தலைப்பெயரின் கீழ் ஐயரவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட் டுரை காண்க. (Dr. S. K. Aiyangar's Commemoration Vol. PP. 176 - 183)

# தேன் கூடு

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

## மனிதன் மூதாதை மச்சமே

சார்ல்ஸ் டார்வின் என்ற பேரறிஞர் வாலில்லாக் குரங்கிலிருந்து மனிதவர்க்கம் தோன்றிற்றென்று ஆராய்ந்து முடிபு கூறினர். இம்முடிபு இதுவரையில் காலூன்றி நின்றது. இப்போது அமெரிக்காவில் நியூயார்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழக ஆசிரியர் டாக்டர் ப்ரடரிக் டின்னி (Tinney) என்பவர் பன்னூறுயிரம் ஆண்டுகட்கு முன்னர், க்ராஸாப் டேரிஜியன் (Crossopterigian) என்ற கால்களுள்ள மீன் தண்ணீரிலிருந்து கரைக்கு மெல்ல நடந்துவந்ததென்றும் அம்மீனிலிருந்தே மனிதவர்க்கம் தோன்றிற்றென்றும் பல நிபுணர்கள் நிறைந்த ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்து டார்வின் கொள்கையை மறுத்தார்.

*　　　*　　　*

## காபி கிறிஸ்தவ பானமான கதை

காபி முதன் முதலில் அரேபியா தேசத்தில் முகம்மதியர்களால் உற்பத்தி செய்யப்பெற்றது. பாலும் சர்க்கரையுமின்றிக் கரிய நீராக அருந்தப்பட்டது. கிறிஸ்தவர்கள் சாத்தான் விஷமென்று இதைத் தொடவுமில்லை. எட்டாவது கிளமெண்டு என்ற போப் (1535—1605) இதைச்சுவைத்து, இதற்கு ஞானஸ்நானம் செய்வித்து இதைக் கிறிஸ்தவபானமாக்கிப் பறைசாற்றினர், அது முதலாக காபி கிறிஸ்தவர்களால் குடிக்கப்பட்டு வருகிறது.

உ

சிவமயம்

# சுந்தரர் நாடகம்

[வித்வான் - அ. மு. பரமசிவாநந்தம்]

அங்கம் 1] [காட்சி 1

இடம்:—மணம்வந்தபுத்தூரில் சுந்தரர்க்குத் திருமணம் நடத்த ஏற்பாடாகியமணப்பந்தல். மணமக்கள் மணவறையில் உட்கார்ந்திருக்கிறார். அந்தணர் எல்லாம் அமர்ந்து இருக்கின்றனர். அரசர் நரசிங்கமுனையர் உட்புகுகிறார்.

அந்தணர் ஒருவர் :—அதோ நமது நரசிங்கமுனையர் வந்துவிட்டார். இனி திருமணச் சடங்கு நடத்தலாம்.

(எல்லோரும் எழுந்து அரசருக்கு மரியாதை செய்கின்றனர்.)

அந்தணர் ஒருவர் :—அரசபெருமானே இனி, கலியாணச் சடங்கு ஆரம்பிக்க உத்தரவு கொடுத்தருளும்.

நரசிங்க முனையர் :—அவ்வாறே ஆரம்பியுங்கள்.

(அந்தணர்கள் கலியாணச் சடங்கை நடத்தித் தாலியைச் சுந்தரர் கையில் கொடுக்கின்றனர். சுந்தரர் தாலிகட்டும் சமயத்தில் கிழவர் உள்புகுகின்றார்.)

கிழவர் :—நில்-நில் - நில்-நிறுத்துங்கள் - நிறுத்துங்கள்- நிறுத்துங்கள். நான் ஒன்று சொல்லவேண்டும். பிறகு தாலியைக் கட்டுங்கள்.

ஒருவர் :—என்னய்யா அபசகுனம். நல்லவேளையில் இந்த கிழட்டுப் பிணம் எங்கிருந்து வந்தது.

மற்றொருவர் :—ஏனய்யா வந்தால் சும்மா வருகிறது தானே. என்னமோ நில்லு-நில்லு-நில்லு என்று சொல்கிறீர்களே உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன ?

மற்ருெரு பெரியவர் :—ஏனப்பா சும்மாயிருங்கள். பெரியவரை இந்தமாதிரி எல்லாம் பேசாதீர்கள். ஐயா பெரியவரே! இங்கே வாரும். எதற்காக நிறுத்தச் சொன்னீர் மணத்தை?

கிழவர் :—இ....ல்...லை. இங்கே உமக்குச் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. அதை உங்கள் எதிரே சொன்ஞல் நன்ருய் இருக்கும் என்று உங்களிடம் வந்தேன். அதற்குள் அவர்கள் என்ன என்னமோ பேசுகிருர்களே.

பெரியவர் :—அவர்கள் கிடக்கட்டும். நீங்கள் சொல்லுங்கள்.

கிழவர்:—யாதொன்றுமில்லை. இதோ இந்தக் கலியாணப் பிள்ளைக்கும் எனக்கும் ஒரு வழக்கு இருக்கிறது.

சுந்தரர் :—(ஆத்திரத்துடன்) என்ன! எனக்கா! உம்முடனு! வழக்கா!

கிழவர் :—ஆம் அப்பா! அந்த வழக்குத் தீர்ந்த பிறகு தான் நீ கலியாணம் செய்துகொள்ள வேண்டும்.

சுந்தரர்:—அப்படியாசரி. உம்முடைய வழக்கைஎடுத்துச் சொல்லும் பார்ப்போம். அப்படி அந்த வழக்கு நியாயமான தாயின் அப்படியே அதை முடித்துக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன்.

கிழவர் :—சபையோர்களே! அந்தணர்களே! மணவினை காண வந்த மற்றவர்களே! இதைக் கேளுங்கள். இதுதான் என் வழக்கு. இந்த திருநாவலூரனுகிய மணமகன் எனது அடிமையாகும். ஆதலால் இவ்வடிமை வழக்கு தீரும் வரை அவன் மணம் செய்து கொள்ளலாகாது.

(சபையோர் எல்லோரும் சிரித்து ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகின்றனர்.)

சுந்தரர்:—என்னய்யா அழகாயிருக்கிறது? என்ன விளையாடுகிறீர்களா? நான் உமக்கு அடிமையா?

கிழவர்:-நான் சொல்லுவது உமக்குச்சிரிப்பாகவிருக்கும். நன்ருகச் சிரியுங்கள். நான் சொல்லியது ஆச்சரியமாய் யிருந்தாலும் இதோ இந்த ஓலையைப் பாருங்கள். (ஓலையை நீட்டுகிருர்.) இவ்வோலை இவ்வாரூரன் முப்பாட்டனுர் எழுதிக் கொடுத்த அடிமை யோலை. இதைக் கண்டேனும் உண்மை தெரிந்து கொள்ளுங்கள்.

சுந்தரர் :—வயதில் மூத்தோய், இதுவரையில் இவ்வுலகில் இருக்கும் முறையன்றி இது புதிதாகக் காண்கின்றது. அந்தணர் வேருேர் அந்தணருக்கு அடிமையாதல் எங்கேயாவது உண்டோ? அவ்வாறு அடிமை என்ற கதையை இன்று தான் கேட்டோம். நீர் என்னபித்தரோ, உமக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ.

கிழவர் :—நான் பித்தனுனாலும் ஆகட்டும் அல்லது பேயனுனாலும் ஆகட்டும். நீ என்ன சொன்னபோதிலும் அதனுல் நான் கஷ்டப்படமாட்டேன். நான் சொல்வதைக் கண்டு நீ அறிந்து கொள்ளாவிட்டால் என்னிடை வீண்வார்த்தை பேச வேண்டாம். நீ எனக்குப்பணி செய்யவேண்டியது.

சுந்தரர் :—சரி அப்படியானுல் நீர் ஓர்அடிமை ஓலைவைத்திருப்பதாகச் சொன்னீரே அதைக் காட்டும்.

கிழவர் :—உன்னிடத்தில் இந்த வோலையைக் காட்டலாமா. இதோ இந்த சபையாரிடத்தில் காட்டி உன்னை அடிமையாக்கிக் கொள்ளுகிறேன் பார்.

(சிறிது நகர்கிருர். சுந்தரர் பின் தொடர்ந்து அந்த வோலையைப் பற்றிக் கிழித்து விடுகிருர்.)

கிழவர் :—ஐயையோ! என் ஓலையை அநியாயமாகக் கிழித்து விட்டானே. இங்கே யாரும் கேட்பவர் இல்லையா? இது அநியாயம் அல்லவா? (சிலர் வந்து விலக்குகின்ருர்.)

சபையோர்:—ஐயா பெரியவரே நீர் வருந்தாதீர். நாங்கள் அதைப் பார்த்துக் கொள்ளுகிறோம். அது கிடக்கட்டும். ஐயா நீர் இருப்பது எந்த ஊர்?

கிழவர்:—சபையோர்களே, என் ஊர் தொலைவில் இல்லை. இதோ கொஞ்சதூரத்தில் தெரிகின்ற திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறேன். அது கிடக்கட்டும். இவன் அந்த ஓலையைக் கிழத்ததே தான் அடிமை என்பதைக் காட்டவில்லையா? அவன் எனக்கு அடிமையே.

சுந்தரர்:—பெரியோய்! நன்று நன்று நீர் பழயமன்றாடி போலும். உம் ஊர் வெண்ணெய் நல்லூரென்று உரைத்தீர் அல்லவா! வாரும் அங்கே உம் வழக்கை எடுத்துச் சொல்லுவோம்.

கிழவர்:—வெண்ணெய் நல்லூர் போனாலும் சரி வேறு எங்கே போனாலும் சரி அங்கே சென்று அந்த சபையார் முன்பு என் மூல ஓலையைக் காட்டி உன்னை எனக்கு அடிமையாக்கிக் கொள்ளுகிறேன் பார்.

(முன் செல்கின்றனர் யாவரும் பின் தொடர்கின்றார்)

---

அங்கம் 1.] [காட்சி 2.

இடம்:—வெண்ணெய் நல்லூர் அரங்கு, வேதியர் முன் விசாரிப்பு.

கிழவர்:—வெண்ணெய் நல்லூர் வேதியப் பெரியீர்! நும் முன் உரைக்க வேண்டும் வழக்காரூரன்றுளது. இவ்வாரூரன் எனக்கு அடிமை. அவ்வடிமையென்று காட்டிய ஓலையை இவன் பற்றிக்கிழித்தான். இதை நீவிரே விசாரித்துத் தீர்ப்பளித்தருளும்.

அவையோர் :—என்ன சொன்னீர் ஐயா! இந்த மாநிலத்தில் அந்தணர் அடிமையாதலில்லையே ? நீர் கூறுவது எதன்பாற் படுவது ?

கிழவர் :—அப்படியா ? நான் காட்டிய ஓலை இவன் தந்தையின் தந்தை எழுதிக்கொடுத்ததொன்றாகும். அதனையும் இல்லையென்று ஒல்லையில் மறுக்க இயலுமோ ?

அவையோர் (ஆரூரரை நோக்கி) :—நம்பியாரூரரே! என்ன, நீர் செய்தது உமக்கு நன்றாமோ ? எழுதும் ஓலையை இசைவினாற் காட்டினால் நீர் அதைப் பற்றிக் கிழித்தல் ஓர் நீதியாமோ? அவ்வாறு செய்வது நன்றேயோ? கிழவர் சொன்ன வாக்கினைக் கேட்டோம். இனி உமது சொல்லென்ன ? கூறும்.

சுந்தரர் :—அனைத்து நூலுணர்ந்த அவையீர்! என்னை நீவிரெல்லாம் ஆதி சைவனென்றறிவீர்! இவ்வாறு ஆதி சைவர் மற்றவர்க்கு அடிமையாதல் எங்கணும், என்றும், யாவருக்கும் ஒவ்வாத ஒரு செயலாகும். ஆனால் இம்மறையோர் இவ்வாறு கூறுவது என்னால் தெளியத் தகாததாய் இருக்கின்றது. இதன் மாயை இற்றெனஅறியகில்லேன்.

அவையோர் :—மூதறிஞரே ! இன்று நீர் கூறுவது ஓர் புதுமையாயுள்ளது. இது உலகில் நடைபெறாததொன்றாய்க் காண்கின்றது. இந்த வெவ்வுரையை மெய்ப்பிக்க உம்மால் இயலுமோ ? ஆட்சியிலாகிலும், ஆவணத்திலாகிலும், அன்றிக் காட்சியிலாகிலும் உன் முறைக்கு ஓர் உறுதி காட்டல் வேண்டும். அவ்வாறு காட்டின் நான் மெய்யென்று ஒப்புக்கொள்வேன்.

கிழவர் :—அப்படியாயின் நன்று. அன்று அவனிடங் காட்டியது படி ஓலை. இதோ மூல ஓலையை நான் வைத்திருக்கின்றேன். அதைக் காட்டுகின்றேன். இதோ நிற்கும் ஆரூ

ரன் அதைப் பற்றிக் கிழிக்காதிருக்கும்படி செய்ய வல்லீரேல் எடுத்துக் காட்டுகின்றேன்.

அவையோர் :—நாம் அவரை ஓலைகிழிக்காது செய்து கொள்ளுகின்றோம். (சுந்தரரை நோக்கி) ஐயா நீர்சற்றே விலகி நில்லும்.

(அவர் ஓலை கொடுக்கின்றார். அவையோர் அதை வாங்கிக் கணக்கரிடம் வாசிக்கச் சொல்ல கணக்கர் வாசிக்கின்றார்.)

" அருமறை நாவலாதி சைவனாரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானுமென்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை
யிருமையா லெழுதிநேர்ந்தே னிதற்கிவை யென்கையெழுத்து"

மறையோர் :—நன்று இஃது இயைந்ததாகவே காண் கின்றது. எனினும் இது ஆரூரர் பாட்டனார் கையெழுத்து தானோ அன்றிவேறோ அறிய வேண்டும். ஆரூரரே, இவ் வோலை உம்முடைய பாட்டனாருடையது தானோ பார்த்தறி மின்.

கிழவர் :—பெரியீர் ! இவன் பாட்டன் கையெழுத்தை இவன் பார்த்தறிதல் வல்லவனோ ? அப்பாட்டனார் கையெழுத்துப் பிரதி வேறு ஏதாவதொன்றுளதாயின் அதைக் கொண்டு ஒத்திட்டுப் பார்ப்பின் உண்மை விளங்கும்.

மறையோர் :—கணக்கரே ! இவ்வாரூரர் பாட்டனார் கையெழுத்தொன்று இருக்குமாயின் அதைக் கொண்டு வாரும் ஒத்துப்பார்ப்போம். (கணக்கர் ஒன்று கொண்டுவந்து ஒத்துப் பார்க்கின்றனர். ஒத்திருக்கின்றது.) ஐயா ! ஆரூரரே, இவ்விரண்டு கையெழுத்துக்களும் ஒத்தே இருக்கின்றன. இனிச் செய்ய வேண்டுவது ஒன்றில்லை. நீர் இவருக்கு அடிமைதான். நீர் மறைமுனிவனார்க்குத் தோற்றீர்.

சுந்தரர் :—ஆ, அவ்வாறாயின் நான் என்ன சொல்ல இயலும். நான் அடிமையாகின்றேன்.

அவையோர் :—நன்று, மறையோய்! நீர் காட்டும் ஆவண ஓலையில் உங்கள் ஊர் எம்மூரே என்று எழுதியுள்ளது. அவ்வாறாயின் உம் வீடு, சுற்றம் முதலியவைகளை எங்கட்குக் காட்டுமின்.

கிழவர் :—அவ்வாறாயின் எம்முடன் வாரும் காட்டுகின்றேன்.

(முன் செல்ல அனைவரும் தொடர்கின்றனர். திருவருட்டுறை முன்னே கிழவர் சென்று பின் சென்ற அனைவரும் காண மறைந்து விடுகின்றனர். ஆண்டவன் அனைவரும் காண ஆலயத்தே காட்சி அளிக்கிறார். சுந்தரர் வருந்துகிறார்.)

இறைவன் :—ஆரூர! வருந்தற்க. முன்பு நீ கயிலையில் நமக்குத் தொண்டனா யிருந்தனை. உன் மனதிற் றோன்றிய ஓர் வேட்கை வயத்தால் நம் ஏவலாலே மண்ணில் வந்து பிறந்தனை. அன்று யாம் கூறியபடியே நீ இவ்வுலக வாழ்க்கையில் வீழ்ந்து வருந்தா வண்ணம் நாமே நேரில் வந்து நன்புல மறையோர் முன்னம் தடுத்தாண்டோம்.

சுந்தரர் :—(சிரம் கைகூப்பி) ஆ! என்னை ஆளுடைய இறைவ! உன்னுடைய உயர்பெரும் பதத்தை உன்னி நின்ற என்னை வலிய ஆட்கொண்ட வள்ளலே! உன்னருட் பெருந் திருவருளை உன்னாது வாழ்நாளை அவமே போக்கினேனே. உலகுக்கொரு முதலே, உனது கருணைத் திறத்தை உலகறியக் காட்டினை. உற்றாரிலாதார்க்கு உறுதுணையாகும் உத்தம! உனது வலிய ஆட்கொண்ட செயலோ இது? (சோர்வடைந்து) நான் உமக்கு என் செயலாற்றுவன்!

அசரீரி:—

“ மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னுநாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க

அர்ச்சனைப் பாட்டேயாகு மாதலான் மண்மேனம்மைச்
சொற்றமிழ்ப் பாடு."

சுந்தரர் :—கற்றூர்கள் உற்றேரும் காதலானே! வேதியனுகி என்னை வழக்கினுல் வெல்ல வந்து அறியா எனக்கு உணர்வு தந்து உய்யக்கொண்ட கோதிலா அமுதே! அயனும் மாலும் அறியொணு ஆதியே! ஐந்தெழுத்தும் பாடிய பொருளாயுள்ளாய்! இன்று உன் குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன் நான்?

இறைவன் :—வன்ரெண்ட! அஞ்சற்க. நீ முன்பு என்னைப் 'பித்தா' என்று மொழிந்தனை ஆதலால் என்னைப் 'பித்தன்' என்றே பாடுவாயாக.

சுந்தரர் :—ஆ! ஆட்கொண்ட அண்ணலே! உன் அருள் நினைந்து பாடுதற்கும் அடியெடுத்துத் தந்தாய். உன் பெருந் திறம் பேசற்பாற்றே! உலகத்தீர்! ஒன்றுய் வாரும். உமையொரு பாகனைப் பாடுவோம்.

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை [யுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறை
அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே.

---

அங்கம் 2.] [காட்சி 1.

(திருவதிகையில் ஒரு மடம்—நள்ளிருள்—சுந்தரர் படுத்துறங்குகிறூர்—இறைவன் ஓர் அடியார் கோலத்தோடு அருகேவந்து படுத்து அவர் தலைமேல் காலை வைத்து இருமுகிறுன்.)

சுந்தரர் :—யாரது? தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது என் தலைமேல் கால் வைப்பது. (கிழவர் இருமுகிறூர்.) ஓ ஐயோ! பாவம்! ஓர் கிழவர் போலும். ஐயா என் தலையின்

மேல் கால் வைக்காதேயுங்கள். சற்று தள்ளி படுத்துக் கொள்ளும்.

கிழவர் :—அப்பா! தலையின் மேலா கால் வைத்து விட்டேன். ஏதோ கட்டையென்று தெரியாமல் செய்துவிட்டேன் போலிருக்கிறது. நான் வயதாகிய கிழவன். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. இது உன் தலையா? அப்படியானால் இதோ என் காலை எடுத்துக் கொள்ளுகிறேன். என் மேல் கோபித்துக் கொள்ளாதே.

சுந்தரர் :—சரி. சிறிது ஒதுங்கித் தூங்கும்.

(உடனே சுந்தரர் எழுந்து மற்றொருபுறம் படுத்துறங்குகிறார். அங்கும் அக்கிழவர் எழுந்து போய் அவர் தலைமைல் தம் காலை வைக்கிறார்.

சுந்தரர்:—(கோபத்துடன்) யாரது? மறுபடியும் அதே கிழவரா? (கிழவர் இருமுகிறார்.) நீரா என் தலைமேல் மறுபடியும் காலை வைப்பது?

கிழவர் :—அப்பா. மறுபடியுமா - உன் தலையிலா - காலை வைத்தேனு. நான் அங்கே படுத்துக்கொண் டிருந்தேனே. இங்கே எப்படி வந்தேன். எனக்கு ஒன்றும் தெரியவில்லையே.

சுந்தரர் :—நன்று நீர் கூறுவது. உடனே விலகி அப்பால் செல்லும். என் தலையின்மேல் கால் வைத்து என் தூக்கத்தையும் கெடுக்கிறீர். எழுந்து அப்பால் போகிறீரா? என்ன· சரி - நானே போய் படுத்துக் கொள்ளுகிறேன்.

(சுந்தரர் எழுந்து மறுபுறம் போய்படுக்க அங்கேயும் கிழவர் காலை வைக்கிறார்.)

சுந்தரர்:—ஆ! மறுபடியும் இங்கே வந்தாயா? உன்னை என்ன செய்கிறேன் பார். (எழுந்திருக்கிறார்.)

கிழவர்:—அப்பா உனக்கு நான் கிழவன் என்பது தெரியவில்லையா? என்னைப் பார்த்தா இப்படிக் கோபிப்பது?

சுந்தரர்:—நீ யார்? ஏன் இப்படிப் பலமுறை என் தலைமேல் காலை வைக்கிறாய்?

கிழவர்:—ஆ! என்னை நீ அறிந்திலையோ? இனியாயினும் அறிந்துகொள். (மறைந்து விடுகிறார்.)

சுந்தரர்:—(துக்கித்தவராய்) என்னே! என் அறியாப் பேதமை. உலக நாயகனாகிய ஒரு பரம்பொருளே தானாக வந்து எனக்கருள்புரிந்தும் நான் அறியாது போனேனே. என் இறுமாப்பு என்னே! ஆதி பராபர! அங்கயற்கண்ணி பங்க! உலகமெங்கும் ஒன்றாகக்காணும் உத்தம! செம்மாந்து அறியாது யான் என் செய்தேன்? என்னைத் தானே வந்து பதமளித்து ஆட்கொண்ட அண்ணல்தன் பொற்பாதம் அடியேன் முடிமிசை அடையப் பெற்றும் பற்றாது விட்டேனே! என் மனப்போக்கு இருந்தவாறு என்னே! ஆ! விடையேறும் வித்தகா! உன் அருள் விளையாடலை ஒன்றுமறியாக் கசடனாகிய என்னிடத்திலோ காட்ட வேண்டும்?

தம்மானை யறியாத சாதியாருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே.

---

## திருவாரூர்க் கோயில்

சுந்தரர்:-கரையுங் கடலு மலையுங் காலையு மாலையு மெல்லாம்
உரையில் விரவி வருவா னொருவ னுருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க் கெல்லாம்
அரைய னிருப்பது மாரூ ரவரெம்மையு மாள்வரோ கேளீர்.

புற்றிடங் கொண்ட புண்ணிய! ஏழைகட் கிரங்கும் வந்தால்! பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும் பொன்றிவிழ அன்று பொருசரந் தொட்டானே! பூங்கோயில் மேய புண்ணியா! யார்க்கும் பற்றிடமாய பரம்பொருளே! பார்ப்பதி பாக! தூநறுங் கொன்றை அண்ணல்! உன்னைக் காண நீயே அழைத்த பேறினை எண்ணுதிருக்க இட முண்டோ?

அசரீரி :—வன்றொண்ட! வாழிய நீ! நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தனம். அன்று நாம் ஆட்கொள்ள வந்த போதிருந்த திருமணக்கோலத்தோடு என்றும் இப்புவிமிசை நிலவி நின் வேட்கை தீர மண்மேல் விளையாடுவாயாக.

சுந்தரர் :—எனை ஆட்கொள வந்த மறையவனே! ஆரூர் அமர்ந்த அருமணியே! வாட்கயல் கொண்ட கண் மங்கை பங்க! நாயேனைப் பொருளாக எண்ணி உன்பதம் இன்று தந்தெனை ஆட்கொண்டது உன் பெருங் கருணையன்றே!

(வழுத்தி ஓர் புறம் செல்கின்றார். மறுபுறம் பரவையார் பாங்கியருடன் வந்து பூசனை செய்கின்றார்.)

பரவையார் :—போதரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுத்தருளும் பிஞ்ஞக! நின் வழித் தொண்டருள் அடியாள் ஒருத்தி இவண் நின்று நின் திருஉருக்கண்டு களிக்கும் பேறருளிய பெரியாய்! உன் அருள் வழிபட்டு நிற்க எனை ஆட்கொண்ட அண்ணல்! உன்

னற்கரிய ஒருவ! நீ எனை வழித்துணை கொண்டு வாழ்விக்க வேண்டும்.

(பரவையார் செல்கின்றார். மறுமுறை ஒருபுறம் சுந்தரரும், மறுபுறம் பரவையாரும் வருகின்றனர்.)

சுந்தரர் :—ஆ, இவ்வற்புதமென்னே! இத்திருக்கோயிலுக்கு இத்தகைய பேரெழில் வாய்ந்தாளொருத்தி வந்து வணங்கிச் செல்வதை இன்றே கண்டனமன்றே. இது ஆண்டவன் அருள் வடிவோ.

“ கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்த
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேன் என் செய்வதுவே ”

“ மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவளவல்லிக்
கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
ருனிளம் பருவங் கற்குந் தனியினந் தனுவதாமோ ”

(இவ்வாறு கூறி இறைவன் சன்னிதியை இவர் சேர்கின்றார். சன்னிதியிலிருந்து வரும் பரவையார் மறுபுறம் சென்று சந்திக்கிறார்.)

பரவையார் :—என் கண் முன் தோன்றும் இக்கட்டழகன் யாரோ! அறியக் காண்கிலனே! நிலைத்துள்ள என் மனம் நிலையிலாத் தன்மையால் இன்று அலைகின்றதே.

“ முன்னே வந்தெதிர் தோன்று முருகனோ பெருகொளியால்
தன்னேரின் மாரனோ தார் மார்பின் விஞ்சையனோ [னே
மின்னேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்றுடையவ
யென்னே யென் மனந்திரித்த இவன் யாரோ அறிகிலனே!”

(பிறகு பரவையார் இறைவனை வழிபட்டு வேறுவழியாகவெளிச் செல்கின்றார்.)

சுந்தரர் :—அதோ தோன்றும் அவ்விளங் கொடியார் யார்?

ஒருவர் :—அவர் நங்கை பரவையார் எனப்படுவார். அவர் உம்பர்தரத்தார்க்கும் சென்று சேர்வறியாச் சிறப்பு வாய்ந்தவர்.

சுந்தரர்:—பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பர் மே
லார் பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர் பரவை யாயினு டிருவுருவின் மென்சாய
லேர் பரவை யிடைப்பட்ட என்னுசை யெழு பரவை.

(என்று கூறி கோயிலுட் புகுந்து ஆண்டவனை வேண்டுகின்றார்)

அருளுடைப் பெரும! அன்று வலிய வந்து மணவினை நடக்காமற்றடுத்த நீர் என்னை வலிய இவ்வாரூர்க் கழைத்தது ஏனோ? அழைத்து அந்த மணக்கோலத்தோடு விளையாடு என்று உரைத்தது ஏனோ? எம்பெருமானே! எவ்வாருயினும் தாம் அக்காரிகையாம் பரவையை எனக்கு மணம் முடித்து வைக்கவேண்டும். நீங்கள் கூறியபடியே எல்லோரும் என்னைத் தம்பிரான் தோழர் என அழைக்கின்றனர். உம்மைத் தோழராகப் பெற்ற எனக்குக் கிட்டாததென்? பெரும! நீர் எனக்கு அப்பரவையைத் தந்தருளவேண்டும்.

(தொழுது வெளிவந்து பரவையைத் தேடுபவராய்)

ஆ, இப்போது வெளிப்போந்த நங்கை எம்மருங்கு போயினள்? பாசவினைப் பற்றறுக்கும் பரமனது ஆசை மேலோ ராசை அளித்து தேசின் மன்னி என்சிந்தை மயக்கிய ஈசனருள் பெற்ற எழிலார் எங்கு சென்றனர்? ஆண்டவனை அன்றி வேறொன்றை விரும்பாத என்னைத் தன்னை விரும்பும்படி செய்த தாழ்குழலாள் எங்கு சென்றனள்? இறைவனை எண்ணும் என் சிந்தை மயக்கிய சேயிழை சென்ற திசை யெதுவோ அறிகிலேனே.

(பரவையார் தனித்து மெலிதல்; மணி நிலாமுற்றம்)

பரவையார் :—கார்குழலீர் எல்லோரும் என்னைத் தனி விடுத்து ஏகுமின். சேடி ! மைவிரவு கண்டரை நாம் வணங்கப் போகும் சமயத்தே எதிர் வந்தவர் யார் ?

தோழி :—அவர் அந்தணர் குலத்தினராம். இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சைவ முதற்றிருத்தொண்டராம். தம்பிரான் தோழராம். நம்பி என்பார்களாம்.

பரவையார் :—ஆ, இறைவனார் திருத்தொண்டரா அவர் ! ஆ, உயிர்த்தோழி ! ஈதென்ன ? தெள்ளிய சந்தனம் முதலியனவெல்லாம் கனல்வாய்ந்த தன்மையன வாய்க் காண்கின்றனவே. சந்தின் றழலைப் பனிநீரளவித் தடவுங் கொடியீர் ! தவிரீர். தவிரீர். ஆ, என்னே ! இச்சந்திரனும் கொடுமை புரிகின்றான். வந்திங்குலவும் விரையார் மலய அனிலமும் அனலாய் வருகின்றது. ஆ, இந்நிலையில் அந்தண் புனலும் அரவும் விரவுஞ் சடையான் அருள் பெற்ற அத்தயவாளர் அருளாதிருக்கின்றார் ? (தோழியர் அகல்கின்றனர்). ஆ, கொடுமை மிகும் சந்திரனே ! நான் தனிமையில் உற்றேன் என்று எனை வருத்த எண்ணினையோ ? இன்றோருலகில் எனக்கொன்று பிறர்க்கொன்றாக இருக்கின்றாய். இவ்வாறு முன் தோகையர்கள் யாவரையும் ஒத்துநோக்காத் தன்மையிலன்றோ நீ தேய்ந்து போகின்றாய். ஆ, உன் கொடுமை யென்னே ! உன் கொடுமை நினைந்து தான் போலும் என்னை ஆளும் அன்னையோர் பாகனும் விடத்தையும் மிடற்றடக்கி உன்னை அங்கமில்லா அவிர் சடையில் தங்க வைத்தது.

கன்னற் சிலையாய் ! உருவிலாளனே ! என் மனத்தைக் கலக்கும் காளை கவின் கண்டு முன்னிற்பதற்கு நாணியோ இன்று என்னை முனிகின்றாய்.

(தோழியர் சிலர் உள்பிரவேசிக்கின்றனர்.)

ஒரு தோழி :—என்னம்மா என்னென்னமோ பிதற்று கிறீர்கள். ஏதாவது பிடித்துக் கொண்டதா என்ன ?

மற்ருெருத்தி :—அடி, இது உனக்குத் தெரியாதா? அன்று கோயிலுக்குச் சென்ரோமே அங்கே ஒன்று வந்து பிடித்ததே!

பரவையார் :—சீ, போடி இது என்ன விளையாட்டு? என்னிடமா நீங்களெல்லாம் விளையாடவேண்டும் ?

தோழி :—இல்லையம்மா. அப்படி ஒன்றுமில்லை. ஏதோ அங்கொருவரைக் கண்டீர்களே யென்று சொன்னேன்.

பரவையார் :—(கோபமாக) என்ன விளையாட்டு முற்று கிறதா ? யாரை நான் எங்கேயடி கண்டேன் ?

ஒருத்தி :—அம்மா எங்கள்மேல் கோபப்பட வேண்டாம். நாங்கள் கண்டதைச் சொன்னும். எங்களிடம் உண்மையைக் கூறினல் நாங்கள் உன் காரியத்தை முடித்து வைப்போம்.

பரவையார் :—ஆ ! அப்படியா உயிர் தோழி. மற்றவர்களை யெல்லாம் வெளியே போகச் சொல்.

உயிர்த்தோழி :—சகிகளே ! நீங்கள் வெளியே சென்று மலர் கொய்து வாருங்கள்.

(தோழிகள் செல்கின்றனர்.)

தோழி :—அம்மா ! அனைவரும் சென்று விட்டார்களே. இனியாவது உண்மையைச் சொல்லமாட்டீர்களா ?

பரவையார் :—தோழி ! நான் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது ? கோயிலுக்குச் சென்றது முதல் நடந்ததெல்லாம் நீயே யறிவாய்.

தோழி :—ஓஹோ, இந்த சந்திரனை அந்த பாம்பு பிடித்துக் கொண்டதாக்கும். அறிந்தேன், அறிந்தேன். இப்போது என்னை என்ன செய்யச் சொல்கிருய் ?

பரவையார் :—ஆ! தடுமாற்றம் இல்லாது இருந்தவளுக்கும் இன்று தடுமாற்றம் உண்டாகியதை நேரில் கண்ட தோழியே உனக்கு நான் என்ன சொல்லப் போகிறேன்.

தோழி :—நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். நான் எல்லாம் தெரிந்து கொண்டேன். இதோ ஒரு நொடியில் அவரை இங்கே அழைத்து வந்து விடுகிறேன் பாரும்.

பரவையார் :—ஹா! உண்மையாகவா ? இப்பொழுதே வா ? இங்கேயா !—அழைத்து வருகிருயா ?

தோழி :—என்ன அவசரண்டியம்மா ?

பரவை :—ஒன்றுமில்லை சென்று சீக்கிரம் வா.

(தோழி செல்லுகிருள் பரவையார் தனிமையில்.)

'தேருங் கொடியும் மிடையும் மருகில்
திருவாரூரர் நீரே யல்லால்
ஆரென் துயரம் அறிவார் அடிகேள்
அடியேன் அயரும் படியோ இதுதான்
நீரும் பிறையும் பொறிவாள் அரவின்
நிரையும் நிறைவெண்டலை இன்புடையே
ஊரும் சடையீர் விடைமேல் வருவீர்
உமது அன்பிலர்போர் யாளுே உறுவேன்.'

(தொடரும்)

---

## திருப்போரூரில் சமாஜக் கூட்டம்

சமாஜத்தின் ஆடி மாதக் கூட்டம் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் திருப்போரூரில் ஆடி கிருத்திகை யன்று (1-8-1937) நடைபெற்றது. திருவாளர்கள் மா. துரைசாமி முதலியார், புரிசை முருகேச முதலியார், சோமசுந்தர முதலியார் ஆகிய மெய்யன்பர்கள் முறையே திருப்போரூர் சந்நிதிமுறை, முருகன் அவதாரம், பெரியார் தொண்டு என்பன பற்றிப் பேசினார்கள்.

---

## சைவத் தேர்வுகள்

இவை 21-11-1937-ல் நடைபெறும். இத்தேர்வுகட்கு விண்ணப்பம் செய்யும் கடைசி தேதி 20-8-1937. இளஞ்சைவப் புலவர் தேர்வு கட்டணம் ரூ. 1. சைவப் புலவர் தேர்வு கட்டணம் ரூ. 2. விண்ணப்பத் தாள் தேர்வு விவரங்களை ஓரணா தபாற்றலையனுப்பிப் பெறுக.

---

### திருநெல்வேலி ஜில்லா பெருங்குளம்

### சமரச சன்மார்க்க சங்க

## மூன்றாவது ஆண்டு நிறைவு விழா

இவ்விழா சைவ சித்தாந்த மகா சமாசத் தலைவர் உயர்திரு "சித்தாந்த ஆசிரியர்" ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் தலைமையில் நடாத்தப் பெற்றது. தலைவரவர்களால் "சமரச சன்மார்க்கம்" என்னும் பொருள்பற்றித் தலைமைப் பேருரை நிகழ்த்தப்பெற்றது. திருவாளர்கள் ச. முத்துக்குமாரசாமி பிள்ளை, S. T. ஆதித்தன் B. A., B. L., R. ஆழ்வாரப்ப பிள்ளை, C. சுப்பையா முதலியார் இவர்களால் முறையே "பண்டைத் தமிழகம்", "நெற்றிக் கண்", "கடவுட் பத்தியும்—அடியவர் பெருமையும்", "சமூகக் குறைபாடுகள்" என்னும் பொருள்கள்பற்றிய சொற்பொழிவுகள் செய்யப் பெற்றன. தலைவரவர்களால் ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும் சொற் சுருங்கப் பொருள் விளங்க முடிவுரை நிகழ்த்தப் பெற்றது. வந்தனோபசாரம், கடவுள் வாழ்த்துடன் விழா நிகழ்ச்சி இனிது முற்றுப் பெற்றது.

---

## திருமுருகாற்றுப்படை

மூலமும் மிகத் தெளிவான பதம்மருவிய பொழிப்புரையும் பல புதிய திருத்தங்களோடு வெளிவந்தாயிற்று. தனிப்பிரதி விலை அணா ஒன்று. இருபது பிரதிகள் விலை ரூபாய் ஒன்று. தபாற்கூலி வேறு.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 10. No. 8


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# சம்பந்தர் தேவாரம்

இரண்டாம் பதிப்பு

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சமாஜத்தின் இரண்டாவது அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகக் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சமாஜ விழாவின் தொடக்கத்தில் திருக்கச்சியேகம்பத்தில் மாவடி வைகும் சிவபெருமான் திருமுன்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் பாடல்கள் பைகா எழுத்திலும், முக்கிய பகுதிகள் தடித்த எழுத்திலும் உள்ளன. திருமுறை எண், பதிக எண், மொத்தப் பாடல் எண், சரித்திரமுறைப் பதிக அட்டவணை, முதற் குறிப்பகராதி, சரித்திரம், ஆராய்ச்சிக் குறிப்புகள், அரும்பொருளகராதி, சிவஸ்தல சிவசக்திநாம அட்டவணை முதலிய பல அருமைப் பாடுகள் இவ்விரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

தனிப் பிரதி ரூபா ஒன்றேகால்.

ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பத்து.

எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்பது.

தபாற்கூலி ரயில்வே பார்சல் கூலி வேறு.

உடனே முன் பணம் அனுப்பி விண்ணப்பஞ் செய்க.

இங்ஙனம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-A. கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், சென்னை.
10—8—37.

ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
பி. ஏ., பி. எல்.,
காரியதரிசி


Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapat Mudali Street, Royapettah. Edited and Published by A. Somsundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Mah. Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.